விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித நபர்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-8254)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 06 வெள்ளிக்கிழமை (22.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

ஐ.தே.கவுக்கு புதிய தலைமைக்குழுவை நியமிக்க ரணில் விக்கிரமசிங்க முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமைக்குழு ஒன்றை நியமிக்க ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்துள்ளார். அடுத்த வாரம் இந்த குழு நியமிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நான்கு பேரைக் கொண்டதாக இந்த தலைமைத்துவ குழு இருக்கும். சஜித் பிரேமதாஸ, ஹரின் பெர்னாண்டோ, அகில விராஜ் காரியவசம், 23



ஆறு மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் தெரிவு

(கொழும்பு)

ஆறு மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் 23

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் அரசியல் தீர்வொன்றை உறுதிப்படுத்துங்கள்

ஜனாதிபதி கோட்டாபயவிடம் இந்தியா வலியுறுத்து

(புதுடில்லி)

தமிழ் சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்தியா வலியுறுத்தி யுள்ளது.

கொழும்புக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்தியாவின் இந்த விருப்பத்தை தெரிவித்ததாக புதுடில்லியில் நேற்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் சமத்துவத்துடனும் நீதியுடனும் சமாதானமாகவும், கண்ணியமாகவும் வாழக் கூடியதாக அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வொன்றை 23

சுன்னாகத்தில் விபத்து

குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த பண்டாரி யோகராசா (வயது - 59) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம். புதன்கிழமை சுன்னாகத் 23

மயக்கமடைந்து விழுந்தவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற குடும்பஸ்தர் மயக்கமடைந்து விழுந்ததில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 23

எதிர்க் கட்சித் தலைவர் யார் என்பதை சபாநாயகரால் தீர்மானிக்க முடியாது

சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் யார் என்பதை பாராளுமன்றத்தில் சபாநாயகரால் தீர்மானிக்க முடியாது.

இது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய உட்கட்சி விவகாரம், இதனை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் பெரும் பான்மையான உறுப்பினர்கள் உள்ள கட்சியில் பாராளுமன்றக் குழுத் தலைவரே எதிர்க் கட்சித் தலைவராக 23

நாட்டின் 24ஆவது பிரதமராக

மகிந்த ராஜபக்ஷ நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்



(கொழும்பு)

நாட்டின் 24ஆவது பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ தனது கடமைகளை பிரதமர் செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண் 23

கடற்படை, இராணுவ அதிகாரிகள் மீது

புலன் விசாரணைகளை முன்னெடுத்த சி.ஐ.டி. பணிப்பாளருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், தாஜூதீன் படுகொலை உள்ளிட்ட பெரும் குற்றங்கள் தொடர்பிலான மர்மங்களை துலக்கிய குற்றப் புலனாய்வாளரான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. 23

புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளதாக அறிவிப்பு

இருவர் தமிழர்

(கொழும்பு)

புதிய அமைச்சரவை இன்று வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களின் மிக முக்கிய கலந்துரையாடல் பாராளுமன்ற கட்டடத் தொகுதி 23

கிருமித் தொற்று காரணமாக கர்ப்பிணிப் பெண் உயிரிழப்பு

கொடிகாமத்தில் சோகம்

(யாழ்ப்பாணம்)

கிருமித் தொற்றுக் காரணமாக கர்ப்பிணிப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் கொடிகாமம், இயற்றாலை பகுதியைச் சேர்ந்த தவராசா உஷா (வயது - 27) என்ற கர்ப்பிணிப் 23

பிரதமரின் செயலாளராக

காமினி செனரத் நியமனம்

(கொழும்பு)

பிரதமரின் செயலாளராக காமினி செனரத் ஜனாதிபதி கோட்டாபயவால் நியமிக்கப்பட்டுள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் அத்தியடியை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி கனகாம்பிகை நாகலிங்கம்
அவர்கள் 19.11.2019 செவ்வாய்க்கிழமை அன்று
காலமான செய்தி அறிந்து அவரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அத்தியடி வாழ் மக்கள்

(C-8292)

URGENT VACANCY

Lion Engineering and Construction is looking for Technical Officer for immediate employment.

Required Qualification

- **NCT, HND or Equivalent**
- **Minimum Experience 02 Years**

➢ Send your CV to email

Lion Engineering and Construction
No.255, Dr.Subramaniyam Road, Chunnakam
Tel : 077 558 8835
Email : lionengineering9@gmail.com

(1139)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சிவஞானம் அன்னம்மா

பிறப்பு : 16.03.1943 இறப்பு : 22.11.2018

சோகத்தின் சுமையதனை
சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம்
பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்து ஏன்
நெடுந்தூரம் சென்றீர்களோ?

தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
42/6,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(1138)

குருவே துணை

வாழ்க வையகம் **வாழ்க வளமுடன்**

ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களில் மூத்த பேராசிரியை அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 23.11.2019 சனிக்கிழமை தொடக்கம் 29.11.2019 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியர் ச.இந்திரா (இந்தியா, தமிழ்நாடு), மனவளக்கலை பேராசிரியர் ஆ.சுப்பிரமணியன் (Bsc.Physics, MA.YHE) துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 2ம் நிலை 23.11.2019 சனி மற்றும் 24.11.2019 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் - இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல : 021 222 2772

(C-8290)

பிரதமர் மகிந்தவுக்கு மோடி வாழ்த்து

(புதுடில்லி)

இலங்கையின் புதிய பிரதமராக நேற்றைய தினம் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ விற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் தளத்தில் இது தொடர்பில் அவர் பதிவொன்றை இட்டுள்ளார்.

மேலும் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்த மகிந்த ராஜபக்ஷவுடன் தாம் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

2020 ஆம் ஆண்டிற்கான 2 ஆவது மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2020.01.01ஆம் திகதி தொடக்கம் 2020.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 22.11.2019 - 05.12.2019 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 06.12.2019 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 06.12.2019 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

தொ இ	விபரம்	மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT உள்)	மீளளிக்கவேண்டிய கேள்வி வைப்பு	ஏற்றுக் கொள்ளத் தகுந்த ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர)	மாத வாடகை (VAT,NBT தவிர)
	சுன்னாகம் உப அலுவலகம்				
1	சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட)	3,000.00	30,000.00	10,510,000.00	
2	சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01	1,000.00	10,000.00	2,442,450.00	250.00
3	கருவாட்டுக் கடை இல 03	750.00	7,500.00	36,000.00	250.00
4	முட்டைக் கடை இல 04	750.00	7,500.00	38,205.67	250.00
5	கோழிக்கடை இல 06	1,000.00	10,000.00	201,000.00	250.00
	உடுவில் உப அலுவலகம்				
1	இணுவில் சந்தை	750.00	7,500.00	67000.00	
	ஏழாலை உப அலுவலகம்				
1	ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை	750.00	7500.00	40500.00	250.00

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2019.10.10ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர் - வலிகாமம் தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம்.
22.11.2019

(C-8286)

கேள்வி அறிவித்தல்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வளிச்சீராக்கி திருத்தும் சேவை தொடர்பில் இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932 / 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **25.11.2019 ம் திகதி முதல் 05.12.2019 ம்** திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 500/= கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விகள் **06.12.2019** ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய் கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் கேள்விக்கான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் கேள்வியாளர் களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

இல	கோவை இல	விடயம்	மீளளிக்க முடியாத வைப்புப் பணம்
01	NP/K/RDHS/Services/2020/01	வளிச்சீராக்கி திருத்தும் சேவை	500.00

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

(C-8288)

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கோட்டாவிடம் இந்தியா பிரஸ்தாபிக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு

தமிழ் மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்திய நீதியரசர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்தியா பிரஸ்தாபிக்கும்என்பது எனது எதிர்பார்ப்பு. இணைந்த வடக்கு-கிழக்கில் சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையிலான தீர்வு ஒன்றை இந்தியா ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இதனை நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் செய்யும்என்று தமிழ்மக்கள் முழுமையாக நம்புகின்றார்கள் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கேள்வி:- இந்திய வெளி நாட்டமைச்சர் இலங்கைக்கு விஜ யம் செய்து புதிய ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவை சந்தித்து சென்றிருப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின் பின்னர் கோட்டாபய இந்தியாவுக்கு விஜயம் செய்ய வுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப் பது குறித்தும் உங்களின் கருத்து என்ன?

பதில்:- ஜனாதிபதியாக கோட் டாபய ராஜபக்ஷ பதவி ஏற்ற மறு நாளே இந்திய வெளிநாட்டமைச் சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு வந்து சந்தித்து சென் றிருக்கின்றமை அரசியல் ரீதி யில்மிகவும்முக்கியமானது என்றே நான் கருதுகின்றேன். தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி, பாது காப்பு மற்றும் பொருளாதாரம் போன்ற விடயங்களில் இந்தியா வுக்கு பலத்த கரிசனை உண்டு. அதன் நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் இந்தியா கொண்டிருக்கும் ஆர்வத்தை இது தெளிவாக எடுத்துக்காட்டு கிறது.

அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக்கொண்டு வரு வதில் இந்தியா தனக்கு இருக்கும் கடப்பாட்டைப் புரிந்து கொண் டுள்ளது.

அதன் காரணமாக புதிய ஜனாதிபதிக்கும் புதிய அரசாங்க த்துக்கும் ஆலோசனைகளை இந்தியா கொடுக்கும் என்று நான் ஆழமாக நம்புகின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இனப் பிரச் சினைக்கான தீர்வு குறித்து இந் தியா பிரஸ்தாபிக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. இணைந்த வடக்கு-கிழக்கில் சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையிலான தீர்வு ஒன்றை இந்தியா ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்க ளின் எதிர்பார்ப்பு.

இதனை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் செய்யும் என்று தமிழ் மக்கள் முழுமையாக நம்பு கின்றார்கள். ஏற்படுத்தப்படும் எந்த ஒரு தீர்வும் நிலையான தாகவும் தமிழ் மக்களுக்கு நம் பிக்கை அளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்கள் தமது பூர்வீகப் பகு திகளில் தமது பாரம்பரியம், அடையாளம் மற்றும் பொருளா தார வளம் ஆகியவற்றைத் தாங் களே நிர்வகிக்கும் வகையில் காணி மற்றும் பொருளாதார விட யங்களில் முழுமையான அதி காரங்களைக் கொண்டிருக்கும் வகையில் தீர்வு அமைய வேண் டும்.

தனி ஒரு மதத்துக்கு முன்னு ரிமையையும் சிறப்பு சலுகையை யும் கொடுப்பது எந்தளவுக்கு ஏனைய சமூகங்களின் மனித உரிமைகள் மற்றும் கலாசாரங் களைப் பாதிக்கும் என்பவை எல் லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆகவே, இறுதித் தீர்வு தொடர் பில் எல்லா தமிழ் கட்சிகள் மத்தி யிலும் கருத்து ஒற்றுமையை ஏற் படுத்தும் பொருட்டு கலந்துரை யாடல்கள் நடைபெற வழி வகுக் கப்படவேண்டும். ஐந்து கட்சி களும் தற்போதும் 13 கோரிக்கை களை வலியுறுத்துவதாக அறி வித்தால் எம்முள் ஒருவர் எமது கருத்தொற்றுமையை புதிய அர சாங்கத்திடமும் இந்தியாவிடமும் வலியுறுத்தலாம்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜனநாயக ஆட்சியை ஜனாதிபதி வழங்குவார்

(கொழும்பு)

மக்களின் மனம்கவர்ந்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவி த்த வெதுருவே உப்பாலி தேரர் புதிய ஜனாதிபதி மக்களுக்கு ஜனநாயக ரீதியிலான ஆட்சியை வழங்குவார் என தெரிவித்தார்.

கொழும்பு சோலிஸ் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லா ளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 16ஆம் திகதி எந்த வொரு வன்முறைகளும் இன்றி அமைதியான முறையில் ஜனா திபதி தேர்தல் நடந்தது. நாட்டிற்கு சிறந்த ஜனநாயக ஆட்சியை மேற் கொள்ளக்கூடிய சிறந்த ஜனா திபதியையே நாட்டு மக்கள் அனை வரும் ஒன்றிணைந்து தேர்ந் தெடுத்துள்ளனர்.

நாட்டில் இதுவரையான காலப் பகுதியில் எவ்வாறான நிலைமை காணப்பட்டாலும் இனிமேல் ஜனநாயகம், சகோதரத்துவத்து டன் கூடிய ஆட்சியை மக்களு டன் இணைந்து கோட்டாபய நடத்திச் செல்வார் என மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதனைக்கருத்தில்கொண்டே தங்களின் ஜனாதிபதியை தேர்ந் தெடுத்துள்ளனர்.



ரணில் விக்கிரமசிங்க பல அரசியல் களங்களை சந்தித்த வர். அரசியல் அறிவினை உடை யவர். அதனால் தற்போது பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக முடிவெடுத்துள்ளார். நாட்டிற்கு தேவையான தருணத் தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்.

நாட்டு மக்களில் நூறில் 40 வீதத்துக்கு அதிகமான மக்களின் விருப்புத் தெரிவினை கொண்டி ருந்தார் சஜித் பிரேமதாஸ. இலங் கையின் அரசியலில் முன்னோடி கட்சியாக எவ்வேளையிலும் ஐக்கிய தேசியக்கட்சி விளங்கும்.

வெற்றியை தனதாக்கி 69 இலட்சத்துக்கும் அதிகமான மக் களின் மனம்கவர்ந்த ஜனாதிப தியாகியுள்ள கோட்டாபய மக்க ளுக்கு ஜனநாயக ரீதியிலான ஆட்சியை வழங்குவார்.

நாட்டின் அனைத்து மத நல் லிணக்கத்தையும் நிலைநாட்டி மக்கள் அனைவரையும் பாது காக்க வழிசெய்வார் என தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

குண்டுத் தாக்குதல் குறித்து ஆராய நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய விசேட ஆணைக்குழுவை நியமிக்குக

ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய முழு நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக் குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்த அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார்.

குறித்த கடிதத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக தற்போதும் பாதிக்கப்பட்டவர் களிடம் கடும் சந்தேகம் மற்றும் தெளிவற்ற நிலை காணப்படுகி றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் ஆகி யோரிடம் குறித்த தாக்குதல் தொட ர்பாக முழு நீதிமன்ற அதிகாரம் கொண்ட விசேட ஆணைக்குழு வொன்றை நியமிக்குமாறு கோரி யிருந்தார்.

எனினும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை. அது தொடர் பாக நியமிக்கப்பட்ட நாடாளும ன்ற விசேட தெரிவுக்குழு தொடர் பாக பேராயர் கர்தினால்கூட திருப் தியடையவில்லை.

அதன்படி, எந்தவொரு அரசி யல் கட்சிகளுக்கும் சார்பற்ற சுயா தீன, நம்பிக்கையுடைய மற்றும் அது தொடர்பாக அனுபவம் நிறை ந்த சுயாதீன நபர்களைக் கொண்ட முழு நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்" என அவர் தனது கடிதத்தில் மேலும் வலியுறுத்தினார். (இ-7)

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் 45 எம்.பிக்கள் அவசர கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பாக 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை ரணில் விக் கிரமசிங்க பதவியை இராஜி னாமா செய்த நிலையில், அவரை எதிர்க்கட்சித் தலைவராக நிய மிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் சபாநாயகர் கருஜேயசூரியவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு

வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல்

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்,மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2020 ஆம் ஆண்டிற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள், வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாதிரி படிவத்திற்கு அமையதாமாக தயாரித்தோஅல்லது மாவட்டச் செயலககொள்ளல் கிளை மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் மேலும் www.mullaitivu.dist.gov.lk எனும் இணையத் தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம். மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டிட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறும்,

ஒப்பந்தத் தொகை	பதிவுக்கட்டணம்
ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை	ரூபா 2000.00
ரூபா 2,000,000 இற்குஅதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை	ரூபா 3000.00
ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை	ரூபா 5000.00

ஏனைய வழங்குனர்கள் ஒவ்வொரு வகை வழங்குனர் பதிவிற்கும் தனித்தனியாக ரூபா-250/= இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர், மாவட்டசெயலகம்,முல்லைத்தீவு" என்னும் பெயரில் உள்ள இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041979 ற்கு பணமாக வைப்பிலிட்டு வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கிவைப்பு சிட்டை பிரதியினை இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாக மாவட்டசெயலக நிதிக்கிளையில் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்ப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறியீட்டு இலக்கம்	வேலைகள்
W-1	அனைத்து வகையான வெல்டிங் வேலைகள் மற்றும் அலுமினிய வேலைகள்.
W-2	கட்டிட,மின்சார கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள்.
W-3	நீர்க்குழாய் கட்டமைப்பைமேம்படுத்தல் மற்றும் திருத்தவேலைகள்.

நிபந்தனைகள்

❖ மேற்படிW – 1-3 வரையான விடயங்களுக்கு மேற்குறிப்பிட்ட வகுப்பிற்களுக்குரிய வியாபாரப் பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

குறியீட்டு இலக்கம்	பொருட்கள்
G-1	அலுவலகத் தளபாடங்கள் - மரம், இரும்புருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டீஎப்
G-2	காகிதாதிகள், எழுதுபொருட்கள்
G-3	சுத்திகரிப்புப் பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்காரங்கள், காப்பிக், பைனோல், Handwash, Airfreshner, துடைப்பான் மற்றும் ஏனையவை)
G-4	போட்டோப்பிரதி இயந்திரங்கள்,கணினி அச்சியந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், மல்டிமீடியா புரெஜெக்டர்
G-5	கணனி இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் அதனோடு இணைந்த துணைச் சாதனங்கள்.
G-6	மின் உதிரிகள்,பொருத்திகள்,மின் உபகரணங்கள் மற்றும் தொடர்புசாதனங்கள்.
G-7	மோட்டார்வாகனஉதிரிப்பாகங்கள்.
G-8	உணவுவகைகள்,குடிநீர்வகைகள்,பால்மா வகைகள்,மென்பானம்.
G-9	பொதுஉபகரணங்களும் வீட்டுப்பாவனைப் பொருட்களும்.
G-10	திரைச்சீலைகள், சீருடைகள், மேசைவிரிப்புக்கள், நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள், மேசைக்கண்ணாடிகள், மழைஅங்கிகள், கால்மிதிகள், பெற்சீற், தலையணை உறைகள்.
G-11	அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள், நீர்க் குழாய்கள் மற்றும் நீர் வழங்கல் உபகரணங்கள், காற்றுச் சீராக்கிகள், நிறப் பூச்சுக்கள்
G-12	தோல் வகைஉற்பத்திப்பொருட்கள்
G-13	விளையாட்டுப் பொருட்களும் உபகரணங்களும்
G-14	இசைக்கருவிகள்
G-15	விவசாய எந்திரங்கள், எந்திரஉபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும்
G-16	மீன்பிடி தொடர்பான பொருட்கள்
G-17	சுய தொழிலுக்காக வளர்க்கப்படும் விலங்குகள் (கோழிக்குஞ்சுகள், பார்பசுக்கள் ஆடுகள்)
G-18	இலத்திரனியல்,மின்சாரப் பொருட்கள் (மின்விசிறி,தொலைக்காட்சிப்பெட்டி, டிஜிரல் புகைப்படக் கருவி,வீடியோபதிவுக் கருவி,CCTVபுகைப்படக் கருவி போன்றன)

குறியீட்டு இலக்கம்	சேவைகள்
S-1	போட்டோப்பிரதி இயந்திரங்கள்,கணனி இயந்திரங்கள்,கணினி அச்சியந்திரங்கள் மற்றும் கணனி வலையமைப்பு முறைமை திருத்த வேலைகள் மற்றும் பராமரித்தல்.
S-2	அலுவலகத் தளபாடங்கள் திருத்தம் செய்தல் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டீ.ஏப்) கதிரை இழைத்தல்
S-3	குளிருட்டிகள், வளிபதனாக்கிகள் (A/C) திருத்தலும் பராமரித்தலும், சேவிஸ் செய்தலும்
S-4	மின் உபகரணங்கள் பழுதுபார்த்தலும் சேவிஸ் செய்தலும்
S-5	மின் வயர்கள் பழுதுபார்த்தலும் பராமரித்தலும்
S-6	இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள், புல்லுவெட்டி இயந்திரங்கள் திருத்தலும் பராமரித்தலும்.
S-7	வாகனம் பழுதுபார்த்தல் :- உள்வாரியானதிருத்தங்கள் இயந்திரம் மற்றும் வாகனப் பகுதிகளை பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்.
S-8	வாகனம் பழுதுபார்த்தல் :- வெளிவாரியான திருத்தங்கள் தகடுகள்(Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும்.
S-9	வாகனம் பராமரித்தல்- காலஅட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லுஒழுங்கு (Alignment) பரிசீலித்தல், சில்லுசமன் செய்தல்,டயர்மாற்றம் செய்தல் சீற் மற்றும் குசன் கவரிடுதல் மற்றும் வாகன உட்புறசேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும்
S-10	மேடைமற்றும் ஒலிபெருக்கிசேவைகள்
S-11	அச்சிடுதல் (offset, digital உட்பட), புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் தயாரித்தல், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள் செய்தல்.
S-12	வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல்.
S-13	சலவை செய்தல்.
S-14	தையல் சேவை.
S-15	உள்ளக தொலைபேசி திருத்தலும் பராமரித்தலும்.

பொதுவான நிபந்தனைகள்

வழங்குனர்களைப் பதிவுசெய்தலுக்குரிய பொதுவான நிபந்தனைகள்.

1. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a.வியாபாரபதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்டபிரதி (உள்ளூராட்சி நிறுவனங்களால் வழங்கப்படும் சான்றிதழ்)
   b.நிறுவனப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
   c.உணவுவழங்கல் சேவையாயின் குறித்தபகுதிக்குரியPHI / MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்டசான்றிதழின் பிரதி.
   d.சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதானவாடிக்கையாளர்களின் விபரம்.
2. வழங்குனர்களாக பதிவுசெய்தலானது 2020ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும். பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுகோரப்படும்.
3. விண்ணப்பங்களை பதிவுசெய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையானவிபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காகக்கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை மாவட்டசெயலாளர் கொண்டுள்ளார்.
5. மனுக்கள் கோரும் போதுசரியானவிலைமனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காதபதிவு செய்தவழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமேவழங்குனர்கள் பதிவுசெய்யப்படுவார்கள்.
7. குறிப்பிடப்படும் பொருட்கள்,சேவைகளுக்குவழங்குனர்களாகப் பதிவுசெய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள்,ஆவணங்களின் உண்மைத் தன்மையானது மாவட்டச்செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாகச் சென்றுபார்வையிடுவதன் மூலமோ,நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குனர் குறிப்பிட்டபொருட்கள், சேவைகளுக்கு வழங்குனர்களாகப் பதிவுசெய்வதற்குத் தகுதியற்றவர்எனக் காணப்படுமிடத்துதங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. வாகனபழுது பார்த்தலுக்கோ வாகனப் பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையானவசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சிபெற்றவேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினைப் பரிசீலனைசெய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
9. வழங்குனர்களுக்குப் பெறுகைகளுக்கான காசுமுற்பணம் வழங்கப்படமாட்டாது.
10. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்டமாதிரியில் தயாரிக்கப்பட்டு மீளளிக்கப்படாத வைப்புப்பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2019 டிசம்பர் மாதம் 19ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக" அரசாங்கஅதிபர், கொள்ளல்கிளை,மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு"எனும் முகவரிக்குபதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலைநாட்களில் (மு.ப.9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை) நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போதுகடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2020"என்க் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
11. 2019 டிசம்பர் மாதம் 19ம் திகதிக்குப் பின்புகிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
12. மேலதிக விபரங்களிற்கு"கொள்ளல்கிளை,மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு" தொலைபேசி இல- 0212290096 மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்
மாவட்டசெயலாளர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு ☐

2020ம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல்
மாவட்டசெயலகம் - முல்லைத்தீவு.

1.வியாபார நிறுவனத்தின் பெயர் :.....
2.வியாபார நிறுவனத்தின் முகவரி :.....
3.உரிமையாளரின் பெயர் : .....
4.தே.அ.அ இலக்கம் : .....
5.வியாபார பதிவிலக்கமும் திகதியும் : .....
(பதிவுப்பிரதியின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டியதுஅவசியமானது)
6.தொலைபேசி இல : .....
தொலைநகல் இல :.....
கையடக்க தொலைபேசி இல :.....
7.பதிவுசெய்வதற்கு விண்ணப்பிக்கும் விடயகுறியீட்டு இலக்கம் : .....
(2020ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல் அறிவுறுத்தலில் W1-3, G1-18, S1-15வரைபார்வையிடவும்)
8.வியாபாரத்தின் தன்மை : .....
. (உற்பத்தியாளர்/பிரதானவர்த்தகர்/விற்பனைமுகவர்- அவை தொடர்பான விபரங்கள் ஆவணங்களுடன்)
9.வங்கியாளர்களின் பெயர்கள் :.....
10.கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :.....
11.மின்னஞ்சல் முகவரி :.....
12.வருமானவரி செலுத்துபவராக இருப்பின் அதன் விபரங்கள் :.....
13.பெற்றுள்ளதரச் சான்றிதழ்கள் (ISO) என்பன:.....
14.VAT, NBT இலக்கம் இருப்பின் அதன் விபரங்கள்:.....
(ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
15.ICTAD இலக்கம் இருப்பின் அதன் விபரமும்,அதில் என்னவகுப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விபரமும் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)

..... ஆகிய என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும்,அரசாங்க அதிபர் அவர்களால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறோம்.
பதிவுக்கட்டணம் ரூபா..... வினை 2019..... ந் திகதி மாவட்டச் செயலகத்தின் நிதிக் கிளையிலுள்ள சிறாப்பரிடம் பணத்தை செலுத்திய/மாவட்டசெயலக இலங்கை வங்கியின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரியின் ஒப்பம்:..... திகதி:.....

மூலோபாய பொருளாதாரத் திட்டம் புதிய அரசாங்கத்தில் நடைமுறை

அஜித் நிவாட் கப்ரால் தகவல்

(கொழும்பு)

மூலோபாய பொருளாதாரத் திட்டங்கள் புதிய ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என முக்கிய நிதித்துறை ஆய்வாளரும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநருமான அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வீழ்ச்சி கண்டுள்ள இலங்கையின் நாணயப்பெறுமதி மற்றும் கடன் சுமைகளில் இருந்து நாட்டை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும்.

நாடு எதிர்நோக்கியுள்ள சவால்கள் மற்றும் பொறுப்புக்களை நாம் அறிவோம். வீழ்ச்சி கண்டுள்ள நாட்டைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு தயாராகி வருகிறோம். கடந்த ஆட்சிக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் நாம் கூடிய கவனம் செலுத்தியிருந்தோம். அதற்கிணங்க நாட்டை மேம்படுத்துவதற்காக எத்தகைய திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் நாம் அறிவோம்.

நாணயப் பெறுமதியின் வீழ்ச்சியைத் தடுப்பதற்கு மேலும் காலத்தை விரயமாக்கக்கூடாது. பொது மக்கள் செயற்றிறன் மிக்க நிர்வாகத்தை எதிர்பார்க்கின்றனர். மூலோபாய பொருளாதார திட்டங்கள் புதிய ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

ரயிலுடன் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு - கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த பொடிமெனிக்கே ரயிலில் மோதுண்ட பாதுகாப்புக் கடவைக் காவலாளி ஒருவர் பலியானார்.

இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் முற்பகல் ஹற்றன் - மல்லியப்பு சந்தி ரயில் கடவையில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் 47 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

மாடுகளை இரையாக்கும் முதலைகள்



(காரைதீவு)

வயல் நிலங்கள், கால்வாய்களை அண்டிய பகுதியில் புல் மேயும் எருமை மாடுகள் முதலைகளுக்கு இரையாகின்றன.

அம்பாறை- காரைதீவு பிரதான வீதி மாவடிப்பள்ளியை ஊடறுத்துச் செல்லும் ஆற்றில் இருமருங்கிலும் அதிகளவிலான முதலைகள் உள்ளமையால் தினமும் இச்சம்பவம் இடம் பெறுவதாக மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் கட்டாக்காலிகளாக அப்பகுதியில் திரியும் மாடுகளே இம்முதலைகளுக்கு இரையாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ)

சாதாரணதரப் பரீட்சைக்காக 9 விசேட பரீட்சை நிலையங்கள்

நான்கு சிறைச்சாலைகளும் உள்ளடக்கம்

(கொழும்பு)

இவ்வருடம்நடைபெறவிருக்கும்க.பொ.த. சாதாரணதர்ப் பரீட்சைக்கு மேலதிகமாக ஒன்பது விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

அவற்றில் தங்காலை மற்றும் மாத்தறை சிறைச்சாலைகள், வெலிக்கடைச் சிறைச்சாலை, சிலாபம், சிறைச்சாலை, ஆகியவற்றில் கைதிகளுக்கான விசேட பரீட்சை நிலையங்களும் வடரெகவில் சுனிதா வித்தியாலயம், மகரகமவின் அபேஷா புற்று நோய் மருத்துவமனை மற்றும் நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றிலும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிலையில், நேபாளத்தில் நடைபெறும் 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங் கேற்கும் ஏழு இலங்கை விளையாட்டு வீரர்கள் நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பரீட்சைகளுக்குத் தோற்றுவர் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது. (இ-7)

Ministry of Skills Development and Vocational Training
german cooperation
giz
VTA

கட்டுமானத்துறையானது எமது பிராந்தியத்தில்



அதிக வேலை வாய்ப்பினை
ஈட்டித்தரும் ஓர் துறையாகும்.
அதில் நாமும் இணைவதன் மூலம்
வருமானத்தை அதிகரிப்பதோடு
மற்றவர்களிற்கும்
முன்மாதிரியாக திகழ்வோம்.

பயிற்சியின்போது நாளொன்றிற்கு
ரூபா 500 கொடுப்பனவாக வழங்கப்படும்.
120 நாட்கள் பயிற்சியின் பின்னர்
NVQ-3 சான்றிதழ் வழங்கப்படும்.

◆ கட்டட நிர்மாணவியலாளர்
◆ மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்)

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
021 2227949 | 021 2211793 | 071 03188062 | 071 0318737
(C-8272)

வீட்டின் மீது தாக்குதல்

முறைப்பாடு செய்யச் சென்ற பிரதேச சபை உறுப்பினரின் சகோதரன் கைதானார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஈ.பி.டி.பி.உறுப்பினர் ஜெகதாஸின் கொடிகாமம் வடக்கு பகுதியில் அமைந்துள்ள வீட்டின் மீது நேற்று முன்தினம் புதன் கிழமை மதியம் குழுவொன்று தாக்குதல் நடத்தியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற தனது சகோதரனை பொலிஸார் கைது செய்ததாக பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் புதன் கிழமை மதியம் பத்து பேர் அடங்கிய குழுவொன்று எனது வீட்டு கேற்றை அடித்து அட்டகாசம் புரிந்துள்ளது. இதன்போது அவர்களின் அட்டகாசத்தை தடுக்கச் சென்ற எனது சகோதரனை தாக்க முயன்றுள்ளனர்.

இதன்போது எனது சகோதரன் பதிலுக்கு தாக்குதல் நடத்தி அவர்களை விரட்டினார். அதன் பின்னரும் அக்கும்பல் எனது வீட்டின் மீது தடிகள், கற்கள் கொண்டு தாக்குதல் நடத்தியிருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கி அவர்கள் வருகைதந்து வீட்டினைப் பார்வையிட்டதுடன் முறைப்பாடு ஒன்றை பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்து பதிவு செய்யுமாறும் கோரியிருந்தனர். பொலிஸாரின் கோரிக்கைக்கு இணங்க முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற எனது சகோதரனை பொலிஸார் கைது செய்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30)

கலை மற்றும் மொழி வகுப்புக்களை நடத்த வளவாளர்களை இணைத்துக் கொள்ளல்

(யாழ்ப்பாணம்).

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் வரணிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்கள மொழி, ஆங்கில மொழி மற்றும் இசைக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற் கொண்டுள்ளது.

எனவே குறித்த பாட நெறிகளை கற்பிக்க ஆர்வமுடைய தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுய விபரங்களை எதிர்வரும் 10.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் நிலைய பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், குடமியன், வரணி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 977 0732 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வரணி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி சி. மகிந்தன் அறிவித்துள்ளார்.(இ-5)

நினைவு தின அஞ்சலியும் மரக்கன்று வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில், மன்ற ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப்பிகாசத்தின் 29 ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வும் பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கந்தர்மடம் அரசடி வீதியிலுள்ள காரியாலய மண்டபத்தில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர். பொ.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும். (இ-5)

கனவுகளும் பலன்களும்

கனவுகளுக்கான பரிகாரங்கள்

பொதுவாக ஒருவருக்கு இத்தனை விதமான கனவுகள்தான் ஏற்படும் என்பதற்கு எந்தவிதக் கணக்கும் இல்லை. எத்தனையோ விதமான கனவுகள் ஒருவருக்கு ஏற்படலாம். இருப்பது, இல்லாதது, நடந்தது, நடக்காதது, நடக்க முடியாதது ஆகியவையெல்லாம் ஒருவருடைய கனவில் தோன்றலாம்.

பொதுவாக நல்ல பலன்களைச் செய்யும் கனவுகள் நல்ல கனவுகள் என்றும், கெட்ட பலன்களைச் செய்யும் கனவுகள் கெட்ட கனவுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நல்ல கனவுகளை காணும் போது மகிழ்ச்சியடைகின்றோம். கெட்ட கனவுகளைக் காணும் போது மனம் . வேதனைப்படுகிறது.

சில கெட்ட கனவுகளை நாம் எளிதாக மறந்து விடுகிறோம். ஆனால் வேறு சில கெட்ட கனவுகளை அதுபோல நம்மால் மறக்க முடிவதில்லை. அவை மனதில் ஒரு நெருடலாக இருந்து கொண்டு நிம்மதியை இழக்கச் செய்து விடுகின்றன.

அதுபோன்ற சமயங்களில் அந்தக் கனவுகளுக்கான பரிகாரங்களைச் செய்தால் மனம் அமைதி பெறும். இது போலக் கனவுகளுக்கான பரிகாரங்களைச் செய்வதற்கு மந்திரவாதிகளைத் தேட வேண்டியதில்லை. அதிக பணச் செலவும், சிரமும் இல்லாமலேயே கெட்ட கனவுகளுக்கான பரிகாரங்களைத் தேடிக் கொள்ளலாம்.

வீட்டிலேயே இறைவனை வழிபடுவது தான் கெட்ட கனவுகளுக்கான பரிகாரம். ஆனால், ஒவ்வொரு வகைக் கனவுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை வழிபட வேண்டும்.

காரியத்தடை: நம்முடைய காரியங்கள் தடைப்படக் கூடிய கனவுகளைக் கண்டால் விக்னங்களைக் களையும் விநாயகரை வழிபட வேண்டும். விநாயகருக்கு அர்ச்சனை செய்யலாம். அல்லது விநாயகர் அகவலைப் படிக்கலாம்.

பண நஷ்டம்: நம்முடைய கைப் பொருட்களை இழக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும் கனவுகளைக் கண்டால் மகாலட்சுமியை துதிக்க வேண்டும். அதோடு, கனகதாராஸ்தோத்திரத்தையும் உச்சரித்து வரலாம்.

தெய்வங்கள்: பொதுவாகத் தெய்வங்களைக் கனவில் கண்டாலோ அல்லது குறிப்பிட்ட தெய்வம் நமக்கு நினைவூட்டுவதற்காக நம்முடைய கனவில் தோன்றினாலோ அந்தத் தெய்வத்தை வழிபட வேண்டும்.

பாம்பு: பாம்புகள் கனவில் வந்து பயமுறுத்தினால் பாம்புப் புற்றுக்குப் பால் வார்க்கலாம். அல்லது நாகராஜா கோயிலுக்குச் சென்று வழிபடலாம். அல்லது சிவபெருமானை வழிபடலாம்.

வியாதிகள்: சில நோய்கள் ஏற்படுவதற்கான எச்சரிக்கையாகவும் கன்வுகள் தோன்றலாம். ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கத்தினால் ஏற்படுகின்றது.

எனவே நோய்கள் வருவதற்கான கனவுகளைக் கண்டால் நவக்கிரக வழிபாடு சிறந்த பலன் தரும். நவக்கிரக ஸ்தோத்திரம், கோளறு பதிகம் ஆகியவற்றையும் உச்சரித்து வரலாம்.

பயமுறுத்தும் கனவுகள்:

கனவில் பேய், பிசாசுகள் தோன்றிப் பயமுறுத்தினால் சிவபெருமானை வழிபாட்டால் அந்தக் கனவுகள் வருவது நிற்கும்.

நாய் குறுக்கே பாய்ந்ததால்

ஆட்டோவில் பயணித்த இளைஞன் படுகாயம்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மதியம் வீதியால் பயணித்த ஆட்டோவுக்கு குறுக்காக நாய் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஆட்டோவின் பின்னிருக்கையில் இருந்து பயணித்தவர் காயமடைந்தார். இதில் கரவெட்டி கரணவாய் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.(இ-5-30)

பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு நொச்சிக்காடு இந்துமயான அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மறுதினம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் (முனி கோவில்) நடைபெறும். (இ-5)

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

சதயம்,பூரட்டாதி

			ராகு
சனி, கேது, குரு,	சூரி, சுக்	செவ் புத,	சந்

22.11.2019

கார்த்திகை 06,வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

தசமி காலை 7.11 மணிவரை

ஏகாதசி பின்னிரவு 4.52 மணிவரை

உத்தரம் பிற்பகல் 3.34 மணிவரை

சுபநேரம் 6.10-7.40 மணிவரை

இராகுகாலம் 10.40-12.10 மணிவரை

ஸ்மார்த்த ஏகாதசி விரதம்

சித்தாமிர்தம்

வளவன்

மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

மேடம்

மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

இடபம்

பிள்ளைகளின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும் நாள்.

மிதுனம்

பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கும்பம்

எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம். குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

கடகம்

வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

மகரம்

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்.

சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெற லாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன நன்மையண்டு.

துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்

கன்னி

முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு, விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

வெள்ளை வானைக் காட்டி மக்களை அச்சமூட்டியோர் பின்கதவால் அரசியல் பிழைப்பு நடத்துகின்றனர்

கூட்டமைப்பு மீது டக்ளஸ் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகக் கூடாதென தேர்தல் காலத்தில் வெள்ளை வானைக் காட்டி தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடித்தோர் இன்று பின் கதவால் அரசியல் பிழைப்பு நடத்துகின்றனர் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் ஆதரவின்றி ஜனாதிபதியாக கோட்டாபய தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட கோட்டாபயவுக்கு ஆதரவளித்த தமிழ்க் கட்சிகளில் எனது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியே முதல் முதலாக வெளிப்படையான ஆதரவை அறிவித்தது.

எனது கடந்த கால அரசியல் சாணக்கியத்தின் மூலமும் தென்னிலங்கை நிலவரத்தையும் கணித்து ஜனாதிபதியாக கோட்டாபயவே வரயிருக்கிறார் என பிரசார மேடைகளில் பகிரங்கமாகக் கூறி வந்தேன்.

எனது கட்சி சார்பில் ஜனாதிபதியான கோட்டாபயவிடம் தமிழ் மக்கள் தொடர்பான அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்ததன் அடிப்படையில் அவரின் சாதகமான பதில்கள் எனது நம்பிக்கையை வலுப்படுத்தியது.

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களிடம் நான் தெளிவானதும் உறுதியானதுமான வாக்குறுதியைத் தேர்தல் காலங்களில் வழங்கினேன்.

என்னை நம்புங்கள் செய்வோம்; செய்விப்போம் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தேன்.

ஆனாலும் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மக்கள் கோட்டாபயவுக்கு வழங்கிய வாக்குவீதம் எனக்கு மன வேதனையை அளிக்கின்றது.

சஜித் பிரேமதாஸவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளால் நல்லாட்சி அரசாங்கத்தில் அனுபவித்த சுகபோக அரசியலைப் பாதுகாப்பதற்காக இன்று அரசாங்கத்துடன் பின் கதவால் பேரம் பேசும்

கைங்கரியத்தை செய்வதாக அறிகிறேன்.

எனவே இனியாவது தமிழ் மக்கள், கூட்டமைப்பின் தேர்தல் கால வீரப்பேச்சுக்கு அடிமையாகாமல் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்காகச் செயற்படும் அரசியல் தலைமைக்குப் பின்னால் ஒன்றிணைளந்தால் மக்களின் வாழ்வு சிறக்கும்.

எமது மக்களின் கடந்து வந்த பாதைகள் கடினமாகக் காணப்பட்டாலும் இனிவரும் ஆட்சியில் தெளிவானதும் உறுதியுமான பாதையில் உங்களுடன் நான் நீண்ட தூரம் பயணிக்கத் தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

சிறுவர்களில் 50 வீதமானோருக்கு விற்றமின் டி குறைபாடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள சிறுவர்களில் 50 வீதமானோர் விற்றமின் டி குறைபாட்டுடன் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொறளை மருத்துவ ஆய்வு நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர், டாக்டர் ரேணுகா ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான நிலை, பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார். இவர்கள் முற்பகல் 10 மணியளவிலும் பிற்பகல் 2 மணியளவிலும் 5 முதல் 10 நிமிடங்கள் வரை திறந்தவெளியில் இருப்பது அத்தியாவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ)

பொதுத்தேர்தலில் வடக்கு - கிழக்கு உட்பட அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுவோம்

குமார் குணரட்ணம் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பான திகதி அறிவிக்கப்பட்டால் அதில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்த முன்னிலை சோஷலிசக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான குமார் குணரட்ணம் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட அனைத்துத் தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கிய வகையிலேயே போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் எமது கட்சியை சேர்ந்த இரண்டு பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். அவ்வாறான அச்சுறுத்தல்களைக்கண்டு மீண்டும் நாம் பின்வாங்கப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை சோஷலிசக் கட்சி சார்பில் துமிந்த நாகமுவ போட்டியிட்டிருந்தார். புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவாகியுள்ளதையடுத்து கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் வினவியபோதே அவர் ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

பொதுத்தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில், அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கும் எதிர்பார்த்துள்ளோம். அதற்கான தீர்மானம் பொதுத்தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்ட பின்னர் எடுக்கப்படும். அவ்வாறு போட்டியிடும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையிலேயே தேர்தலில் களமி



றங்குவோம். ஜனாதிபதித் தேர்தலின் போது எமது கட்சியின் ஆதரவாளர்களே வாக்களித்திருந்தனர். அவர்களுக்கு மேலதிகமாக கணிசமான வாக்குகள் கிடைக்கப்பெறவில்லை. இனவாத ரீதியில் சமூகம் பிரிந்துள்ளது. அந்த வகையிலேயே கோட்டாபய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அவருக்கு மாறாகவே வடக்கு, கிழக்கில் வாக்களிப்பு இடம் பெற்றுள்ளது. அதன் ஊடாக ஜனநாயக விரோத நிலைமை உருவாகலாம். ஆகவே, அதற்கு எதிராக மக்கள் சக்தியை ஒன்று திரட்ட வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறான இனவாத சூழ்நிலையில் சோஷலிசத்தை ஏற்படுத்துவதென்பது கடினமான விடயமாகும். ஆகவே சோசலிசத்தின் ஊடாக மக்கள் மத்தியில் ஏற்படும் இனவாதத்தை இல்லாதொழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ளோம். கடந்த காலங்களில் முதலாளித்துவக் கட்சிகள் பல நாட்டை ஆட்சி செய்துள்ளன. அந்தக் கட்சிகளுக்கு தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கியுள்ளன.

30 வருடகால யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் கூட இன்னமும் இனவாத நிலை சமூகங்களின் மத்தியில் காணப்படுகின்றது. அந்த இனவாத சக்திகள் ஏப்ரல் குண்டுத்தாக்குதலுக்கு பின்னர் வலுப்பெற்றுள்ளன. ஆகவே இனவாதம் மற்றும் முதலாளித்துவத்தை இல்லாதொழிப்பதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து போராடுவதனூடாக சோஷலிசத்தை ஏற்படுத்தப் போராட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985கிறிஸ்தவம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.Eng, Civil Engineer
எதிர்பார்ப்பு: NonRC , பட்டதாரி, தொழில் புரிபவர் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/10261

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 20 ¾
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBA, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்
தொ.இ: B/10262

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 34 ¾உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, நகைத்தொழில்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/10267

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 21 ¼ செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:Mechanical Engineer
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10268

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை 1
கி.பா: 14 ½
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Bachelor of Accounting & Finance, Australia
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/6474

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பூரம் 1 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: GAQ, ஆயுள்வேத சிகிச்சையாளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/6483

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2செவ் 12 இல்
உயரம்: 4'5"
தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/6486

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 10
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BBA பட்டதாரி, வங்கியாளர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/6513

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

தமிழர்களின் உணர்வைப் புரிந்து கொள்கின்றோம்

உடனடித்தேவை என்ன என்பது குறித்து நாங்கள் நிச்சயம் ஆராய்ந்து பார்ப்போம்

கெஹலிய வெளிப்படுத்தல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது தமிழ் மக்களின் வேதனை எங்களுக்குப் புரிகின்றது. அந்த மக்களின் உடனடித் தேவை என்ன என்பது குறித்து நாங்கள் நிச்சயம் ஆராய்ந்து பார்ப்போம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கொழும்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் எமது தரப்பு வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டியுள்ளார். இதுவொரு வரலாற்று ரீதியான வெற்றியாகும். ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் அதிகளவில் எமது வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை. எனினும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வலியை நாங்கள் புரிந்து கொள்கின்றோம்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இழப்புக்களைச் சந்தித்தவர்கள். எனவே அவர்களுக்கு அந்த வலி இருக்கும். அதனால் தமிழ் மக்கள் தேர்தல்களில் தமது எதிர்ப்பைப் பதிவு செய்கின்றனர்.

உதாரணமாக எனது மகன் ஒரு தரப்பினரால் தண்டிக்கப்பட்டால் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாமல் போகும். எனது மகன் தவறு செய்திருந்தாலும் கூட என்னால் அவர் தண்டிக்கப்படுவதைத் தாங்கிக்கொள்ள முடியாது.

அந்தத் தரப்பினர் பின்னர் என்னிடம் ஆதரவு கேட்டு வந்தால் நான் ஆதரவு வழங்க மாட்டேன். இதன்போது என்னுடைய உணர்வு புரிந்துகொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையிலேயே தமிழ் மக்களின் உணர்வை நாங்கள் புரிந்து கொள்கின்றோம். எனவே புதிய அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் குறித்து ஆராயவேண்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்ததும் எமது அரசாங்கம் வடக்கு- கிழக்கில் பாரிய அபிவிருத்திகளை செய்தது. எனினும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் இன்னும் குமுறலுடன் இருக்கின்றமையைப் புரிந்துகொள்கின்றோம்.

அதனால் எதிர்காலத்தில் அந்த மக்களின் பிரச்சினைகள் குறித்து விசேட அவதானம் செலுத்துவதுடன் அவற்றுக்குத் தீர்வு வழங்குவது தொடர்பில் ஆராய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம், இலங்கை சைவநெறிக்கழகம்என்பன இணைந்து ஏற்பாடு செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெற்றது.

நல்லாட்சி அரசின் ஊழல்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்

விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊழல் மோசடிகள் இன்றி நாட்டை முன்னேற்றுவார் என்றும் தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொது ஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது.

நாட்டில் இதுவரையிலும் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளை விட இவர் மிகவும் மாறுபட்ட பண்புகளை கொண்டவராக காணப்படுகின்றார். வழமையாக புதிய ஜனாதிபதிக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறும் போது மூடப்படும் காலிமுகத்திடல் இந்தத் தடவை மூடப்படவில்லை. நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போக்குவரத்தும் வழமையைப் போன்று காணப்பட்டது.

சிறந்த தலைமைத்துவ பண்புகளைக் கொண்டுள்ள ஜனாதிபதி ஊழல் மோசடிகளின்றி நாட்டை சிறப்பாக ஆட்சி செய்வார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததை அடுத்து அதற்கு முன்னைய அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குகளையும் தொடுத்திருந்தது. ஆனால் அந்த குற்றச்சாட்டுகள் ஏதாவது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லைதானே.

இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட மோசடிகள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை வழங்குவதுடன், நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்த சிலருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலும் இதனுடன் சம்பந்தப்பட்டு வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று வாழ்பவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

யாழ்.மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் சமர்ப்பிப்பு

627.313 மில்லியன் ரூபாய் எதிர்பார்ப்பு முன்னணி, ஈ.பி.டி.பி. சரமாரிக் கேள்வி கூட்டமைப்பு, ஐ.தே.க, சு.க. மௌனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் (பட்ஜெட்) நேற்று முதல்வர் இ.ஆனல்டால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபையின் சொந்த வருமானமார்க்கமாக 627.313 மில்லியன் ரூபாய் எதிர்பார்த்து 7 பிரதான தலைப்புக்களூடாக வருமானங்களும் 9 பிரதான தலைப்புக்களூடாகச் செலவுகளும் வரையறுக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வருமானத்தின் பெரும்பகுதி மாநகர மக்களிடமிருந்து பெறப்படும் அதேவேளை குறித்த நிதி மாநகர மக்களின் அபிவிருத்திக்கே முழுமையாகப் பயன்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை அடுத்த ஆண்டு யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையை முற்றாக ஒழிப்பதோடு மாற்று உள்ளூர் உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கல், மாநகரத்தின் பசுமைத் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் மரக்கன்றுகளை நடுதல், யாழ்.பொது நூலகத்தில் சூரிய மின்கலப் பாவனையை ஏற்படுத்தல், வட்டார உறுப்பினர்களுக்கு 4 மில்லியன் ரூபாய் ஒதுக்குதல், திண்மக்கழிவகற்றலை சிறந்த முறையில் முகாமை செய்தல், முதன்மையான சுகாதார நகரமாக மாற்றுதல் மற்றும் யாழ்.மாநகரசபையின் புதிய கட்டடத்தை முழுமைப்படுத்தல் போன்ற முதன்மை விடயங்களை உள்ளக்கியதாக பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது.

இப் பாதீட்டு விவாதத்தில் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் கடந்த 2019 பாதீடு தொடர்பில் சரமாரியான கேள்விகளை எழுப்பியதுடன் தற்போதைய பாதீடு நிச்சயமற்ற வருமானத்தை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினர்.

இதேவேளை இந்த அமர்பில் கலந்து கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜக்கியு தேசியக் கட்சி உறுப்பினர்கள் பாதீடு தொடர்பாக எந்தவித விமர்சனங்களையும் முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

சாவகச்சேரி பொதுச் சந்தை குத்தகைக்கு விடப்பட்டது

(சாவகச்சேரி)

நீண்டகாலமாக சாவகச்சேரி நகரசபையினரால் கட்டிக் காத்து வரப்பட்ட சாவகச்சேரிப் பொதுச் சந்தை நேற்று வியாழக்கிழமை கோரப்பட்ட முதல் ஏலம் கோரலின் போதே வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் சாவகச்சேரி நகரசபையினரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய்க்கு மேலதிகமாக ஆயிரம் ரூபாவால் சந்தை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்கே சந்தை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க வேண்டும் என கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நகரசபை உறுப்பினர்கள் கோரி வந்தனர்.

இருப்பினும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் நன்மை கருதி சாவகச்சேரி நகரசபையினர்சந்தையைகுத்தகைக்குவழங்காமல் தாமே நடத்தி வந்தனர்.

இந் நிலையில் தற்போது சந்தைப் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட சில காரணங்களைக் கருத்திற் கொண்டு சந்தையை குத்தகைக்கு வழங்கியுள்ளனர்.

சந்தையை குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக அந்த நிதி மூலம் நகர அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் என சபை உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர். (5-30)

வளவாளர்களுக்கு நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக காரைநகர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2020 ஆம் ஆண்டு பாடநெறிகளைக் கற்பிப்பதற்கான வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை (தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக) எதிர்வரும் 04.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் "கலாசார மத்திய நிலையம் காரைநகர்" எனும் முகவரிக்கு தபால்மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறும் நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் காரைநகர் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

1. கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், 2. கர்நாடக மற்றும் கிராமிய நடனம், 3. சித்திரம் மற்றும் ஓவியக் கலை, 4. நாடகமும் அரங்கியலும், 5. வாத்தியக் கருவிகள், 6. கைவினைக் கலைகள், 7.சிங்களம், 8. ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் உள்ளடங்கும் மேலதிக தகவல்களுக்கு 077 247 8017 என்ற இலக்கத்துடன்தொடர்புகொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

"தமிழ் மக்கள் இனப்பாகுபாடு பார்ப்பவர்கள் அல்ல"

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பக்கச்சார்பின்றி நிர்வகிக்க வேண்டும்

கோடீஸ்வரன் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ் மக்கள் இனப் பாகுபாடு பார்த்தோ, மத பாகுபாடு பார்த்தோ இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. இனப் பாகுபாடு பார்த்து தமிழ் மக்கள் வாக்குகளை போட்டிருப்பார்களானால் அவர்கள் சிவாஜிலிங்கத்திற்கு வாக்களித்திருப்பார்கள் என அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலே வெற்றிபெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அம்பாறை மாவட்ட மக்கள் சார்பாகவும் வடகிழக்கு வாழ் மக்கள் சார்பாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாகவும் வாழ்த்துகின்றேன். ஜனாதிபதி அனைத்து மக்களையும் ஒரே பார்வையில், ஒரே குடையின் கீழ், இன, மத, மொழி பாகுபாடு அற்ற முறையிலே இலங்கைப் பிரஜைகள் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் மனதை வெல்லக் கூடிய வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் செயற்பட்டு இருந்தது. தமிழர்களின் அபிலாசைகளை கருத்தில்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும். ஒரு போதும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப் போவதில்லை. வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பலத்தை தேசியத்திற்கும் சர்வதேசத்திற்கும் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்றுவரையும் ஒருமித்த எண்ணத்தையும் சிந்தனையும் கொண்டவர்களாக பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நோக்கமும் சிந்தனையும் எண்ணமும் தங்களது இன விடுதலை சம்பந்தமாகவும் அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து வடகிழக்கில் பயணிக்க வேண்டும் என்பதனை உலகத்திற்கு பறைசாற்றியிருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான் இம் முறை வடகிழக்கு தமிழர்கள் ஒன்றுசேர்ந்து வெற்றி கண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் மக்கள் இனப் பாகுபாடு பார்த்தோ, மத பாகுபாடு பார்த்தோ இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை.

ஜனாதிபதி பக்கச்சார்பின்றி இந்த நாட்டை நிர்வகிக்க வேண்டும். ஒரு இனத்துக்கோ அல்லது ஒரு மதத்திற்கோ சார்பாக இந்த நாட்டின் ஜனாதிபதி செயற்படுவாராயின் இந்த நாடு மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். இந்த நாட்டில் நடைபெறும் நிர்வாகம், அரசியல் பொருளாதார விடயங்களை சர்வதேசம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கின்றது. சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் இந்த நாட்டில் தமிழர்களின் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த அரசாங்கம் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை விடயத்தில் பல இழுத்தடிப்புக்களை செய்துள்ளது. அது கவலைக்குரிய விடயம். இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ் மக்களின் கலை கலாசார விடயங்களை நன்கு உணர்ந்து செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் திருமதி.ம.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

ஜனநாயகத்தை வலிமைப்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்

ஜனாதிபதி கோட்டாவிடம் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை

(மன்னார்)

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி ஆகியது தமிழ் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அவருடைய யுத்த கால வன்சக்தி செயற்பாடே இதற்கு காரணம். எனவே அவர் ஜனநாயகத்தை வலிமைப்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்.

யுத்தம் முடிவுற்று 10 ஆண்டுகள் ஆகியும் நல்லிணக்கம் என்பது வெறும் உதட்டளவில் தான் உள்ளது. கடந்த நான்கு ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷக்களினால் தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்ள முடியவில்லை என்றால் ராஜபக்ஷக்கள் தான் சித்தாந்தத்தை மாற்ற வேண்டும்.

தமிழ் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ளதால் தான் தன்னெழுச்சியாக வாக்களித்தார்கள்.

நீங்கள் உண்மையான பொறுப்புக்கூறலை ஏற்படுத்துங்கள். முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு வெளிப்படையாக நடந்த வற்றைக் கூறி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனதை வென்றெடுங்கள். தமிழர்கள் நல்லிணக்கத்தையே விரும்புகிறார்கள் "விட்டு விடு விட்டுக் கொடுங்கள்" என்றார் புத்த பெருமான். ஆகவே தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமை இருப்பில் பங்கம் ஏற்படுவதால் தான் தர்க்க நிலை ஏற்படுகின்றது.

சிங்களவர்களை நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் எமக்கு எதிரிகளும் இல்லை அரசியல் வாதிகளின் தவறான சித்தாந்தத்தையே நாம் எதிர்க்கின்றோம்.

பல வருடங்களாக யுத்தம் நடந்த நாடுகளில் கூட நல்லிணக்கம் கூட்டு ஐக்கியம் பெற்று விட்டது. இலங்கையில் துளியளவும் பாதிக்கப்பட்ட தரப்பின் மனங்கள் வெல்லப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

பாதிக்கப்பட்ட தரப்புடன் மனம் திறந்து பேசுங்கள். மாற்றம் ஏற்படும். கடந்த மைத்திரி.ரணில் அரசாங்கம் மென்போக்கில் காலத்தை கடத்தியதே தவிர நின்று நிலைக்கக்கூடிய ஆக்கபூர்வமான எந்த விடயத்தையும் முன்னெடுக்கவில்லை.



ஏன் என்றால் நீங்கள் திடமாக முடிவெடுக்கக்கூடியவர் என்ப தால் இந்தக் கோரிக்கைகளை முன் வைப்பதுடன் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் ஜனநாயக சூழலையும் ஏற்படுத்துவதுடன் ஊழலையும், போதைப் பொருள் கடத்தலையும் கட்டுப்படுத்துவீர்கள் என்று நம்புகிறோம். பதவி ஏற்பில் நீங்கள் பௌத்தர்களால் மட்டுமே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக கூறியது முற்றிலும் தவறானது. தமிழ் பேசும் மக்களின் வாக்கே முதன்மையாகியுள்ளது என்பதை மறந்து விட்டீர்கள்.

வடகிழக்கு . கொழும்பு . மலையகம் என குறைந்தது நான்கு இலட்சம் வாக்குகள் தமிழ் பேசும் மக்கள் வாக்களித்துள்ளனர். இந்த வாக்குகள் இல்லாவிட்டால் நீங்கள் 50 வீதமும் கடந்திருக்க முடியாது. இரண்டாவது சுற்று வாக்கு எண்ணியிருக்க வேண்டும்.

ஆகவே நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக சமத்துவமாக நடந்து கொள்ள வேண்டும். பௌத்தர்களுக்கு மட்டும் ஜனாதிபதியாக இருக்க முனைந்தால் நல்லிணக்கத்தை எப்படி எதிர்பார்க்க முடியும். நாட்டில் புதிய வழி பிறக்கும் வாழ்வுரிமைக்காகவே தமிழ் மக்கள் போராடுகிறார்கள்.

வன்முறையாளர்கள் அல்ல ஜனநாயக விரும்பிகள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

மன்னார் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் தோற்கடிப்பு

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் 12 வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. நேற்று வியாழக்கிழமை சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் முறைப்படி தவிசாளரினால் மன்னார் பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்டு ஆதரவளிக்கும் பிரேரணை தவிசாளரினால் முன்வைக்கப்பட்டது.

அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் யூட் கொண்சாள் குலாஸ், 2019 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தவிசாளர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையுடாக வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிரான பிரேரணையை முன்வைத்தார்.

இதற்கு ஆதரவான உறுப்பினர்கள் தமது ஆதரவை தெரிவித்த நிலையில் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்த தவிசாளர் நிதிக்குழுவின் தீர்மானத்திற்கமைவான திட்டங்கள் முன்வைக்கப்பட்டதை சுட்டிக் காட்டிய போதும் உறுப்பினர்கள் சிலர் தகுந்த காரணங்களை வெளிப்படுத்திய நிலையில் வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் சரியானதென வாதிட்ட போதும் இதற்கு ஆதரவு இல்லாத நிலையில் வாக்கெடுப்பு இடம்பெற்றது. ஆதரவாக 7 உறுப்பினர்களும் எதிராக 12 உறுப்பினர்களும் வாக்களித்ததுடன் ஒருவர் நடுநிலையாகச் செயற்பட்டார். இதனால் சபையின் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

கடந்த 07 ஆம் திகதி மன்னார் பிரதேச சபையின் 20ஆவது அமர்வில் குறித்த விவகாரம் முன்வைக்கப்பட்ட போது சபையில் அமளிதுமளி ஏற்பட்டு தவிசாளரால் சபை ஒத்திவைக்கப்பட்டு நேற்று இடம்பெற்ற நிலையிலே வரவு- செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

தீர்வு கிடைத்தால் மட்டுமே போராட்டத்தை நிறுத்துவோம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

தெற்கிலிருந்து நீதியான தீர்வு வரும் என்று நம்ப முடியாத நிலையில் சர்வதேசத்திடமிருந்தே தீர்வினைப்பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம் என வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தொடர் போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்படி தெரிவித்தனர். அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய ஜனாதிபதியாக கோட்டாபய தெரிவு செய்யப்பட்டுள்ளார். நாமும் ஜனநாயக முறையிலேயே சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான தீர்வுக்காக தெருவில் இருந்து தொடர்ந்து போராடி வருகிறோம்.

நாம் போராட்டம் மேற்கொள்ளும் பகுதிக்கு சிவில் உடையில் வருகைதந்த இருவர் தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தியதுடன் எமது போராட்டம் தொடர்பாகவும் விசாரித்திருந்தனர்.

குறித்த போராட்டத்தை தொடர்ந்து நடத்தப் போகின்றீர்களா? அல்லது முடிப்பீர்களா? என எம்மிடம் கேட்டிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தமிழ் மக்கள் ஆதரவினை வழங்கிய நிலையில் அவர் எமக்கு எந்தவிதமான தீர்வினையும் வழங்கவில்லை.

தற்போது வந்திருக்கும் ஜனாதிபதியும் எமது பிரச்சினை தொடர்பாக என்ன சொல்லப் போகின்றார் என எமக்குத் தெரியவில்லை. எமக்கு யார், எப்போது தீர்வினை வழங்குகிறார்களோ அந்த நேரமே குறித்த போராட்டத்தை நிறுத்துவோம் என அவர்களிடம் கூறியிருந்தோம் என மேலும் தெரிவித்தார். (9-299)

திறப்பு விழாவும் கலை நிகழ்வுகளும்

(சிவநகர்)

வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், திருமதி இராசம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட மணிமண்டபத் திறப்புவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பரந்தன் குமரபுரம் முருகன் கோயில் ஒழுங்கையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதல் நிகழ்வாக முற்பகல் 10.30 மணியளவில் எழுத்தாளர் தாமரைச் செல்வியின் உயிர்வாசம் நாவல் வெளியீடு நடைபெறும். தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு மாலை 5 மணிமுதல் மணி மண்டபத்தில் சொற்பொழிவுகள், பண்ணிசை மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அத்துடன் அன்றையதினம் கிளி.மக்கள் அமைப்பினால் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் 10 மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு மற்றும் மாணவர்களுக்கான 1001 துவிச்சக்கரவண்டிகள் திட்டத்தின் நிறைவு நிகழ்வும் நடைபெறும்.

மாலை 5.30 மணிக்கு பரந்தன் பாடசாலை மாணவர்களின் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து பாடல்கள், நடனங்கள் நடைபெறுவதுடன் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை தலைவருமான சொஞ்செற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பரந்தன் இளைஞர் வட்டம் நடத்தும் பெளர்ணமி விழாவும் தென்னிந்திய இளம் பாடகர்களின் இசை நிகழ்வும் நடைபெறும். 25 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு மாற்றுத்திறனாளிகள் பல்சுவை நிகழ்வும் வவுனியா தமிழ்ச்சங்க அமைப்பாளர் தமிழருவி சிவகுமாரனின் சொற்பொழிவு நடைபெறும். 26 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கலைவாணி வில்லிசை மன்றம் வழங்கும் வில்லுப்பாட்டும் திருமதி சோ.செல்வராணியின் சொற்பொழிவும் நடைபெறும். 28 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கரகாட்டம் சுருதி ஸ்வரங்களின் இசை நிகழ்வும் கிளிநொச்சி தமிழ்ச்சங்கத்தலைவர் வே.இறைபிள்ளையின் சொற்பொழிவும் நடைபெறும். (9-254)

கோழிக்குஞ்சுகளை ஏற்றிச்செல்லும் வவுனியா-மன்னார் தனியார் பேருந்துகள்

பொதுமக்கள் அசௌகரியம்



(குருமன்காடு)

வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்தில் கோழிக்குஞ்சு மற்றும் மரக்கறிகளை ஏற்றிச் செல்வதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி நேற்றுக் காலை 6 மணிக்கு புறப்பட்ட தனியார் பேருந்தின் பின்புறமாகவுள்ள ஆசனங்களில் கோழிக்குஞ்சுகளை ஏற்றிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டனர்.

காற்றின் காரணமாக கோழிக்குஞ்சுகளின் எச்சங்கள் பேருந்துகளில் வீசப்பட்டு கால்களில் மிதிபட்டதனால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியதுடன். அத்துடன் முதியவர்கள், பொதுமக்கள் ஆசனங்கள் இன்மையினால் நின்றபடியே தங்களது பிரயாணத்தை தொடர்ந்தனர்

இத் தனியார் பேருந்து பிரயாணிகள் பேருந்தா? அல்லது கோழிக்குச்சு மற்றும் மரக்கறிகளை ஏற்றிச் செல்லும் வாகனமா? என பயணிகள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியிருந்தனர். தொடர்ச்சியாக சில பேருந்துகளில் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் குறித்த வீடியம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். (9-250)

27 ஆம் திகதி மாவீரர் நாளன்று மதுபான சாலைகளை மூடுங்கள்

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட மதுபான சாலைகள், கொல்களங்கள் என்பவற்றை மாவீரர் நாளான 27 ஆம் திகதி மூடி புனிதத்தன்மையைப் பேணுமாறு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மதுபான சாலைகள், களியாட்டங்கள், கொல்களங்கள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பவற்றை புனித நாளான மாவீரர் நாளன்று மூடி நாளின் புனிதத் தன்மையைப் பேணுமாறு கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினுடைய அமர்வில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை அனைவரும் ஏற்று செயற்படவேண்டும்.

எதிர்வரும் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தன்று கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபான நிலையங்களை மூடியும் களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் இதே வேளை கொல்களங்கள், இறைச்சிக்கடைகள், திரையரங்குகள், தனியார்கல்விநிலையங்கள்போன்ற வற்றை மூட வேண்டும் என சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மாவீரர் நாளான இப்புனித நாளை மதிப்பிற்குரிய நாளாக கடைப்பிடிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

ஹெரோயினுடன் ஒருவர் கைது!



(குருமன்காடு)

வவுனியாவில் 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி. திஸ்சலால்த சில்வாவின் உத்தரவுக்கமைய வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி என்.வெலிகல தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் தேக்காவத்தைப் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய நபர் ஒருவரை ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஒரு கிராம் 970 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார். (9-250)

சர்வமத உறவுப்பால நிகழ்வு

(மன்னார்)

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் மற்றும் கண்டி கறிற்றாஸ்-செற்றிக் ஸ்தாபனங்களுக்கிடையிலான நட்புறவு ரீதியிலான சர்வமத உறவுப்பால நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரின் தலைமையில் மன்னாரில் இடம் பெற்றது.

இதில் கண்டி கறிற்றாஸ்-செற்றிக் ஸ்தாபனத்தின் இயக்குநர் அருட்பணி டெஸ்மன் பெரேரா மதகுருக்கள், கண்டி உதவிக்கல்விப் பணிப்பாளர், அரச திணைக்கள அதிகாரிகள், மன்னார் மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள், வாழ்வுதய பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் அனைத்து மதத்தலைவர்களினதும் ஒருமித்த கருத்தாக மதமானது அரசியல்மயப்படுத்தப்படுவதனை தவிர்த்து உண்மைத் தன்மையான சுதந்திரமாக மத விழுமியங்களை மதிக்கக்கூடிய நிலை எமது நாட்டில் ஏற்பட வேண்டும் என தெரிவித்தனர். (9-285)

ஓமந்தை ஆலய விவகாரம்; கைதாகியவர்கள் விடுதலை

மூவருக்கும் தலா 50 ஆயிரம் அபராதம்

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை மாளிகை பகுதியில் அமைந்துள்ள காட்டு விநாயகர் ஆலய காணியில் உள்ள புராதன சின்னங்களை சேதப்படுத்தியதாக தெரிவித்து ஓமந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காட்டு விநாயகர் ஆலய பகுதி மக்களால் நீண்ட காலமாக வழிபடப்பட்டு வருகின்றது. ஆலயத்திற்கான கட்டடம் நீண்டகாலமாக அமைக்கப்படாத நிலையில் பல வருடங்களிற்கு முன்னர் வைக்கப்பட்ட கற்சிலை ஒன்றினை அப்பகுதி மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த செப்டெம்பர் மாதமளவில் குறித்த ஆலய வளாகப்பகுதியில் அப்பகுதி மக்களால் டோசர்மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் தொல்பொருள் எச்சங்கள் இருப்பதாகவும், புராதன சின்னங்களை அழிக்கும் வகையில் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் ஓமந்தை பொலிஸாருக்கு, தொல்பொருள் திணைக்களத்தால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்தமாதம் 31 ஆம் திகதி அவர்களை விசாரணைக்கு அழைத்த ஓமந்தைப் பொலிஸார் ஆலயத்தின் நிர்வாகம் சார்ந்த ஒருவரை கைது செய்துள்ளதுடன், ஆலயத்தின் அருகில் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் மற்றும் டோசர் சாரதி ஆகியோரை கைது செய்து வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது புராதன சின்னங்களை சேதப்படுத்திய குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்காக கைது செய்யப்பட்ட மூவருக்கும் தலா 50 ஆயிரம் வீதம் 1,50,000 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். (9-250-299)

காலநிலை மாற்றத்தால் வவுனியாவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிர்ச்செய்கை

(நெளுக்குளம்)

காலநிலை மாற்றம் காரணமாக பெரும்போக பயிர்ச்செய்கையினை முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டுக்குரிய பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 602 பயிர்ச்செய்கைக்குரிய குளங்களும், 36 அணைகளும் காணப்படுகின்றன. அவற்றின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வவுனியாவை பொறுத்த வரை பெரும்போகத்தின் மொத்த இலக்காக 48 ஆயிரத்து 922 ஏக்கர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வரைக்கும் 46 ஆயிரத்து 600 ஏக்கருக்குரிய கூட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் விவசாயிகள் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டுள்ளார்கள். பல குளங்களில் நீர்வரத்து இன்மையால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை.

இதுவரை 27 ஆயிரத்து 614 ஏக்கர் வவுனியா மாவட்டத்தில் விதைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 59.2 ஏக்கர் காணிகள் அழிவடைந்துள்ளன. 40 ஏக்கர் யானைகளின் மூலமும் 19 ஏக்கர் வெள்ளப்பெருக்கு காரணமாகவும் அழிவடைந்துள்ளது.

வவுனியாவில் மழைவீழ்ச்சியை பார்க்கும் போது கிராமத்திற்கு கிராமம் மாறுபட்ட நிலையில் காணப்படுகின்றது. காலநிலை மாற்றம் காரணமாக விதைப்பு 51 வீதமாக காணப்படுகின்றது.

குளங்களில் நீர்வரத்து கிடைக்கப்பெற்றால் மாத்திரமே ஏனைய காணிகளில் விதைப்பினை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-299)

ஓமந்தையில் வெடி பொருட்கள் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் இருந்து பழுதடைந்த நிலையில் வெடிபொருட்களை மீட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள தனியார் காணியினை நேற்று முன்தினம் துப்புரவாக்கியபோது மண்ணில் புதையுண்ட நிலையில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை உரிமையாளர் அவதானித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவினை பெற்று நேற்று குறித்த வெடிபொருட்களை மீட்டுள்ளனர். குறித்த பகுதியில் இருந்து மூன்று மகசின்கள் மற்றும் ஒரு கைக்குண்டு என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (9-299)

பாரதம்

உச்சக்கட்டத்தை எட்டியுள்ள வளிமாசடைவு வாழ்நாளில் 17 ஆண்டுகளை இழக்கும் மக்கள்

(டில்லி)

டில்லியில் வளிமாசடைவின் அளவு மிகவும் ஆபத்தான நிலையை எட்டியுள்ளது. இதன் காரணமாக மக்கள் தமது நிர்ணயிக்கப்பட்ட வாழ்நாள் அளவில் 17 ஆண்டுகளை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிகாகோவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று கடந்த 2016 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தரவுகளை கொண்டு நடத்திய ஆய்வின் அடிப்படையில் குறித்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 20 நாட்களாக டில்லியில் காற்று மாசால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். குறித்த நாட்களில் காற்றின் தரம் PM 2.5 ஆகவுள்ளது..

இது உலக சுகாதார நிலையம் அனுமதித்துள்ள வரம்பை காட்டிலும் 25 மடங்கு மிகவும் விஷத்தன்மையுள்ள காற்றாகும்.

கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் இருந்த காற்று மாசை விட இம்முறை 30 புள்ளிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

ஆஸியில் தீவிரமா

பேரழிவு ஏற்படுவ

(சிட்னி)

தெற்கு அவுஸ்திரேலியாவுக்கு பேரழிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காட்டுத் தீ காரணமாகவே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள்செய்திவெளியிட்ட இதேவேளை, தஸ்மானியாவின் காட்டுத் தீ மிக மோசமான கட்டத்தை எட்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தீவிரமாகி வரும் காட்டுத் தீயினால் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நியூ சவுத்வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லாந்தில் காட்டுத் தீயினால் 500 இற்கும் அதிகமான குடியிருப்புகள் அழிவடைந்துள்ளன. மேலும், அவுஸ்திரேலியாவின்

மிகப்
தீயின
என.
ல்பு

ஜனாதிபதித் தேர்தலை இரத்துச் செய்யக்கோரி அல்ஜீரியாவில் மக்கள் போராட்டம்

(அல்ஜீரியா)

அல்ஜீரியாவில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இதனை இரத்துச் செய்யுமாறு கோரி தொடர் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டிருந்த ஆர்ப்பாட்டம் காரணமாக போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அல்ஜீரியாவின் பிரதான வீதிகளில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

அல்ஜீரியாவில் இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

இஸ்ரேல் வான்வ
11 பேர் பரிதாபம

(டமாஸ்கஸ்)

சிரியாவில் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதில் 11 பேர் பலியாகினர். பலர்காயமடைந்தனர்.

இதுகுறித்து சிரியாவின் போர் கண்காணிப்புக் குழு கூறும் போது, "இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் சிரியாவின் டமாஸ்கஸ் பகுதியில் நடத்திய வான்வழித் தாக்குதலில் 11 பேர் பலியாகினர். இவர்களில் 7 பேர் ஈரானியர்கள். சிரியாவில் உள்ள ஈரானின் இராணுவத் தளங்கள் மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன" என்றும் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் அரசும் உறுதிப்படுத்தியுள்ளது. சிரியாவிலிருந்து இஸ்ரேல் மீது ஏவப்பட்ட ஏவுகணைகளுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம்

தெரி
சி
நடத்
எந்த
இஸ்
இ
வாத
சிலை
தரப்
இதில

தங்க நகை வேண்டாம், தக்காளி நகை போதும் விநோத விருப்பத்தால் பிரபலமான மணப்பெண்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் மணப்பெண் ஒருவர் தங்க நகைகளுக்கு பதிலாக தக்காளிகளால் தயாரிக்கப்பட்ட நகைகளை அணிந்திருக்கும் ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் தக்காளியின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் நாடுகளிலிருந்து தக்காளி இறக்குமதி தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தவிலைஉயர்வுஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ தக்காளி அங்கு 300 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுவதால், சாதாரண மக்கள் தக்காளியை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தக்காளி விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க



வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தக்காளி விலை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில், இதனை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும், பாகிஸ்தானின் மோசமான பொருளாதார நிலையை சுட்டிக் காட்டும் வகையிலும், அந்த நாட்டைச் சேர்ந்த மணப்பெண் ஒருவர் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

அந்த மணப்பெண் தனது திருமண நாளில் தங்க நகைகள் அணிவதற்கு பதிலாக தக்காளி நகைகளை அணிந்திருந்தார். (ஜ)

ஹொங்கொங்கில் தொ
அமெரிக்கா பொரு

(வோஷிங்டன்)

ஹொங்கொங் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றியுள்ளது.

ஹொங்கொங் போராட்டத்தில் தொடர் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வரும் நிலையிலேயே இவ்வாறு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில்முதல்சட்டமூலம்ஹொங்கொங் மீது தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்கவும் பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் வழிவகுக்கும்.

அதே போல் "ஹொங்கொங் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் 2019" என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றொரு சட்டமூலத்தில் ஹொங்கொங் பொலீஸ் படையினருக்கு அமெரிக்க நிறுவனங்கள் சில ஆயுதங்களை வணிக ரீதியாக ஏற்றுமதி செய்வதை தடை செய்யும்.

அத்துடன் இந்த சட்டமூலங்கள் ஹொங்கொங்கில் மனித உரிமை மீறல்களுக்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்கும்.

இதற்கிடையே ஹொங்கொங் விவகாரம் தொடர்பாக அமெரிக்க செனட் சபையில் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சீனாவுக்கான அமெரிக்கா தூதருக்கு சீன வெளியுறவு அமைச்சகம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

சீனாவிடம் இருந்து கூடுதல் ஜனநாயக உரிமைகள், ஹொங்கொங்கில் குற்றவழக்குகளில் சிக்குபவர்கள் மீது வெளிப்படையான விசாரணை உள்ளிட்ட 5 அம்ச கோரிக்கைகளை வலி

யுறுத்
போரா
தெ
வரும்
சம்ப
இ
முதல

வெளிநாடு

...கும் தீப்பரவல்!

...மன எச்சரிக்கை

மிகப்பெரிய நகரான சிட்னியில் காட்டுத் தீயினால் புகை மண்டலம் சூழ்ந்துள்ளன. இதன்காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சில பகுதிகளிலும் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. (ஜ)

...வழித் தாக்குதல்
...மாக உயிரிழப்பு

தெரிவித்துள்ளது.

சிரியா தரப்பில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது உண்மை என்றும் இதனால் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்- சிரியா இடையே தீவிர வாதத் தாக்குதல் மற்றும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக அவ்வப்போது இரு தரப்பும் மோதலில் ஈடுபட்டு வருகின்றன. இதில் இரு தரப்பும் வான்வழித் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இஸ்ரேலைப் பொறுத்தவரை ஈரானைத் தங்களுக்கான அச்சுறுத்தல் கொண்ட நாடாகக் கருதுகிறது. இதனால் ஈரான் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட சிரியா மீது இஸ்ரேல் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

...தொடர் வன்முறை;
...ளாதாரத் தடை

யுறுத்தி ஜனநாயக ஆர்வலர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து 6 மாதங்களாக நடந்து வரும் இந்தப் போராட்ட த்தில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்தப் போராட்டம் தொடங்கிய நாள் முதலே அமெரிக்கா ஹொங்கொங் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பி வருகிறது.

இந்த நிலையிலேயே, அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் சபையில் ஹொங்கொங் போராட்டம் தொடர்பாக 2 சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (ஜ)

பொருளாதாரப் போரிலும் எதிரிகளை தோற்கடிப்போம்

ஈரான் கூறுகிறது



(டெஹ்ரான்)

ஈரான் அரசாங்கம் பாதுகாப்பு தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொண்டுள்ள நிலையில், பொருளாதார நெருக்கடிகளையும் தீர்த்துக் கொண்டு முன்னோக்கி பயணிக்கும் என்று ஈரானின் முதன்மை தலைவர் அயதுல்லா அலி காமெய்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே அணுசக்தி பாவனை தொடர்பாக கடந்த 2015 ஆம் ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தங்களது அணுசக்தி திட்டங்கள் அணுவாயுதங்கள் தயாரிப்பதற்கானவை அல்ல என்பதை ஈரான் உறுதி செய்யவும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை வல்லரசு நாடுகள் விலக்கிக் கொள்ளவும் இரு தரப்பிலும் அந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது.

ஆனால் இந்த விடயம் அமெரிக்க நலனுக்கு எதிரானது என்று தெரிவித்து ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக கடந்த வருடம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

அத்துடன் ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்தார். இதனால் ஈரானின் பொருளாதாரம் சீர்குலைந்தது.

அதற்கு பதிலடியாக அணுசக்தி ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய நிபந்தனைகளை ஈரான் அடுத்தடுத்து மீறி வருகின்றது.

அண்மையில் அணுவாயுதம் தயாரிக்கப் பயன்படும் முக்கிய மூலப்பொருளான யுரேனியம் உற்பத்தியை 10 மடங்காக அதிகரித்தது. அத்துடன் ஒரு அணு உலையை நிர்மாணிக்கும் பணிகளையும் ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், 'கடவுளின் கிருபையால் ஈரான் மீதான பொருளாதார தடைகளும் முறியடிக்கப்படும்' என ஈரானின் முதன்மை தலைவர் அயதுல்லா அலி கொமெய்னி அறிவித்துள்ளார்.

'அரசியல், பாதுகாப்பு விவகாரங்கள், இராணுவ நடவடிக்கைகளிலும் எதிரிகளை முறியடித்துள்ளோம் என நண்பர்களும் எதிரிகளும் தெரிந்து கொள்ள வேண்டும்.

கடவுளின் கிருபையால் பல வேறு துறைகளில் எதிரிகளை முறியடித்துள்ளோம். பொருளாதாரப் போரிலும் எதிரிகளை முறியடிப்போம்' என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈரானில் தற்போது பெற்றோல் விலை உயர்வு காரணமாக நடைபெறும் போராட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

பிரான்ஸில் கர்ப்பிணிப் பெண்ணை கடித்துக்கொன்ற வேட்டை நாய்கள்

(பாரீஸ்)

பிரான்ஸ் நாட்டில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணை வேட்டை நாய்கள் கடித்துக்குதறிக் கொன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரான்ஸ் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள வில்லர் கோட்டே ரெட்ஸ் நகரை சேர்ந்த 29 வயதான கர்ப்பிணி, அங்குள்ள வனப் பகுதியில் நடைப்பயிற்சிக்கு சென்றார். அவர் செல்லப்பிராணிகளாக வளர்த்து வந்த 5 நாய்களையும் தன்னுடன் அழைத்து சென்றார்.

அப்போது வேட்டைக்காரர்கள் மான்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தும் வேட்டை நாய்கள் அந்த கர்ப்பிணியை சூழ்ந்து கொண்டு அவரை பயமுறுத்தின. இதையடுத்து, அவர் தனது கணவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் வேட்டை நாய்களிடம் மாட்டிக் கொண்டதாக கூறினார். அதன் பேரில் அவரது கணவர் உடனடியாக அங்கு விரைந்து சென்றார்.

ஆனால் அதற்குள் வேட்டை நாய்கள் அந்த பெண்ணை கடித்துக்குதறி கொன்று விட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்து, விசாரணையை ஆரம்பித்தனர்.

கர்ப்பிணியை கடித்து கொன்ற நாய்களை கண்டறிவதற்காக இதுவரை 93 நாய்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன. அவற்றில் அந்த பெண்ணின் வளர்ப்பு நாய்களும் அடங்கும். (ஜ)

ஐ.எஸ். ஆட்சேர்ப்புக்கு உதவிய அமெரிக்க இளைஞர் கைது

(வோஷிங்டன்)

ஐ.எஸ். பயங்கரவாத இயக்க ஆட்சேர்ப்புக்கான தகவலை பாதுகாக்க கணனி குறியீட்டை உருவாக்கிய குற்றத்திற்காக அமெரிக்காவை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சிரியா மற்றும் ஈராக்கை புகலிடமாகக் கொண்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் உலக நாடுகளில் கால்பதித்து பயங்கரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தினர். சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற பல நாடுகளில் இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினர். இவர்களை அழிக்க அமெரிக்கா தலைமையில் சர்வதேச நாடுகள் ஈராக் மற்றும் சிரியாவில் வான்தாக்குதல்களை நடத்தத் தொடங்கின.

அண்மையில் இந்த கும்பலின் தலைவனாக செயற்பட்ட பக்தாதி சிரியாவில் இட்லிப் நகரில் அமெரிக்க படைகளால் சுற்றிவளைக்கப்பட்டு, தற்கொலை செய்து கொண்டு இறந்தார். இதையடுத்து அபு இப்ராஹிம் அல்-ஹாஷிமி அல்-குரேஷி ஐ.எஸ். அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்தது. பக்தாதி கொல்லப்பட்டதற்கு தகுந்த பதிலடி அளிப்பதாகவும் ஐ.எஸ். அமைப்பு அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்தது.

இந்நிலையில், ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு ஆட்சேர்ப்பு தகவலை பாதுகாக்க கணனி குறியீட்டை உருவாக்கியதற்காக அமெரிக்காவின் சிகாகோவை சேர்ந்த தாமஸ் ஒசாட்சின்ஸ்கி என்பவர் கைது செய்யப்பட்டார். (ஜ)

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆற்றல் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு உண்டு

வியாழேந்திரன் அதீத நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இருக்கிறது என்பதை அறிந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான நட்பின் காரணத்தினால் தான் கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆத ரவளித்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவி க்கையில், " இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக ளைத் தீர்க்கக் கூடிய ஆளுமை யுடையவர் .முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ ஆவார்.

அவருடைய தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டதே ஜனாதி

பதி கோட்டாபய ராஜபக்ஷ தலை மையிலான அரசாங்கம். அவர்க ளுக்கே இந்த நாட்டிலுள்ள பிரச் சினைகளைத் தீர்க்கக்கூடிய, முன் னேற்றக் கூடிய ஆளுமையுள் ளது. இது தெரிந்தும் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான நட்பை சீர்குலைத்துவிடக்கூடாது என்ப தற்காகவே சஜித் பிரேமதாஸவி ற்கு ஆதரவளிக்குமாறு கூட்டமை ப்பினர் கூறினர்" என மேலும் தெரிவித்தார். (ஐ)

வெலிக்கடை சிறைக் கலவரம் 22 இல் மேலதிக விசாரணை

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைக் கலவரம் வழக்கு தொடர்பான சாட்சியப் பதிவுகளை மேற் கொள்வதற்காக வழக்கு விசார ணைகள் ஒத்திவைக்கப்பட்டுள் ளன.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணை க்கு வந்தபோதே மேலதிக விசா ரணைகளை நவம்பர் 22 ஆம் திகதி முன்னெடுக்கவுள்ளதாக நீதவான் அறிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ் ஆய்வாளர் நியோமல் ரங்கஜீவ, முன்னாள் சிறைச்சாலை கண்காணிப்பா ளர் எமில் ரஞ்சன் மற்றும் சிறை புலனாய்வு அதிகாரி இந்திக சம்பத் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைக் கலவரத் தில் 27 கைதிகள் கொல்லப்பட்ட துடன் 40 பேர் காயமடைந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

(கொழும்பு)

நீர்மின் உற்பத்தி நிலையங் களை அண்மித்த நீர்த்தேக்கங் களின் நீர்மட்டம் அதிகரித்துள் ளது. 84 வீதம் வரை நீர்மட்டம் இவ்வாறு அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்க த்தக்க சக்தி அமைச்சின் ஊட கப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர் தன குறிப்பிட்டார்.

இதன் காரணமாக நாளாந்த மின் உற்பத்தி 45 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, காசல் ரீ நீர்த் தேக்கத்தின் நீர்மட்டம் 94.6 வீத மாகவும் மவுசாகலை நீர்த்தேக்க த்தின் நீர்மட்டம் 91 வீதமாகவும் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 86.8 வீதமாகவும் அதி கரித்துள்ளது. (ஐ)

தேர்தல் காலத்தில் மதுபானம் விற்றவர்களுக்கு எதிராக 21 சுற்றிவளைப்புக்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்காக மதுபானசாலைகளை மூடுமாறு உத்தரவிடப்பட்ட தினங்களில் மதுபான வகைகளை விநியோ கிக்கும் நடவடிக்கைகளுக்கு எதி ராக 21 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மது வரித் திணைக்களம் தெரிவித்து ள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடி க்கை நுவரெலியா, கண்டி, குரு நாகல், கொழும்பு மற்றும் நீர் கொழும்பு ஆகிய பகுதிகளிலேயே அதிகளவான சுற்றிவளைப்பு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டிருந்தன.

சட்டவிரோதமான முறையில் கசிப்பை விற்ற 12 இடங்களும் அனுமதிப்பத்திரம் இன்றி சாரா யம் மற்றும் உள்நாட்டு மதுபான ங்களை வைத்திருந்த 08 இடங் களும் சுற்றிவளைக்கப்பட்ட அதேவேளை சட்டவிரோத சிக ரெட்டுகளை வைத்திருப்பவர் களுக்கு எதிரான சுற்றி வளை ப்புக்களையும் மதுவரித்திணை க்களம் மேற்கொண்டிருந் தது.

மேலும், வரி செலுத்தாது சட் டவிரோதமான முறையில் விற் பனை செய்யப்பட்ட 51.000 லீற் றர் மதுபானமும் 1000 சிகரெட் களும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட் டுள்ளன.

சட்டவிரோதமான முறையில் விற்பனையில் ஈடுபட்ட மது பான நிலையத்தின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டது டன், அந்த மதுபான நிலையத் திற்கு சீல் வைக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக 5 இல ட்சம் ரூபாய் அபராதமும் விதிக் கப்பட்டுள்ளது. (ஐ)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

கத்தியும் புத்தியும்

ஒரு திருடன் ஒரு வீட்டில் சென்று திருட வேண்டும் என்று திட்டம் போட்டான். இருட்டினதும் சென்று திருட வேண்டும். ஆனால் இரவா னால் கதவை சாத்தி உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டிடுவார்களே...! என்ன செய்வது, எப்படி வீட்டுக்குள்ளே செல்வது...? இவன் யோசித் தான். ஒரு முடிவுக்கு வந்தான். சரி பகல் நேரத்திலே யாருக்கும் தெரியாமல் நுழைந்து விடுவோம். அங்கே சென்று எங்கேயாவது ஒளிந்து கொள்வோம். இருட்டும் வரைக்கும் பேசாமல் இருப்போம்.

இரவு எல்லோரும் தங்கினதிற்குப் பிறகு மெதுவாகச் சென்று பீரோவைத் திறந்து இருக்கிறது முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடி வந்து விடலாம் என்று திட்டம் தீட்டினான். அதே மாதிரி...ஒரு நாள் மத்தியானத்திற்கு மேலே அந்த வீட்டுக்காரன் எங்கேயோ வெளியில் புறப்பட்டுச் சென்றான். வீட்டுக்கார அம்மா அடுப்பங் கரையிலே ஏதோ சமைத்துக் கொண்டிருந்தார்.

திருடன் பார்த்தான்...இதுதான் சமயம் என்று வீட்டுக்குள்ளே மெதுவாக நுழைந்து விட்டான். எங்கே நுழையலாம் என்று பார்த்தான். வலது பக்கம் ஒரு ரூம் இருந்தது. உள்ளே போனான். அது படுக்கை அறை. அங்கே ஒரு பெரிய கட்டில் இருந்தது. அதற்கு அடியிலே சென்று பதுங்கினான்.

இருட்டினதும் நம்ம வேலையை ஆரம்பிப்போம். அது வரைக் கும் மொறுமையாக இருக்க வேண்டும் என்று சொல்லி பேசாமல் வாயை மூடிக்கொண்டு கம் என்று இருந்தான்.

ரொம்ப நேரம் கழித்து வெளியே சென்றிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்து சாப்பிட்டுவிட்டு லைட்டை நிறுத்திவிட்டுப் படுத்து விட் டான். அந்த அம்மாவும் வேலையெல்லாம் முடித்து விட்டுப் படுத்து விட்டார்கள். நடு இராத்திரி... விடி விளக்கு லேசா எரிந்து கொண் டிருந்தது. வீட்டுக்காரன் மெதுவாகக் கண் முழித்தான். கட்டிலுக்கு நேராக எதிரிலே ஒரு கண்ணாடி அதிலே பார்த்தான். கட்டிலுக்கு கீழே ஒரு திருடன் ஒளிந்து கொண்டிருப்பது தெரிந்து போனது. உடனே அவன் திருடன் திருடன் என்று சத்தம் போடவில்லை யோசித் தான்... மேசையிலே இருக்கிற கத்தியைக் கையில் எடுத்து வைத் துக் கொள்வோம் என்று!

இந்த சமயத்திலே கத்தியை உபயோகிப்பதைவிட புத்தியை உபயோகிப்பது தான் சாமர்த்தியம் என்று நினைத்தான். உடனே அதன்படி செயற்பட ஆரம்பித்தான். எதையும் வெளியிலே காட்டிக் கொள்ளாமல் ரொம்ப சர்வ சாதாரணமாக தன் மனைவியிடம் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி... அதனாலே அவர்களும் அவர் கேட்ட கேள்விக்குப் புத்திசாலித்தனமாகப் பதில் சொன்னார்.

இவன் கேட்டான் இதோ பாரு... நமக்குக் குழந்தை பிறந்தால் அதுக்கு கிருஸ்ணமூர்த்தி என்று தான் பேர் வைக்க வேண்டும் என்றான். அதெல்லாம் முடியாது. ஆம்பிளைப் பிள்ளையாக இருந்தால் ஏகாம்பரம். பெண் பிள்ளையாக இருந்தால் பங்கய வல்லி. இதுதான் உங்க மாமன், மாமியார் பெயர். அதைத்தான் வைக்க வேண்டும் என்றார் அந்த அம்மா.

அதெல்லாம் முடியாது.. நான் முடிவு செய்து விட்டேன் கிருஸ்ண மூர்த்தி என்று கத்தினான் அவன். இல்லை ஏகாம்பரம் பங்கய வல்லி என்று கத்தினார் இந்த அம்மா! வாதம் முத்திப் போனது.

கிருஸ்ணமூர்த்தி கிருஸ்ணமூர்த்தி கிருஸ்ணமூர்த்தி என்று அவன் கத்தினான். ஏகாம்பரம், பங்கயவல்லி, ஏகாம்பரம், பங்கய வல்லி என்று இவர் கத்தினார். ஒரே சத்தமாகப் போனது! இதைக் கேட்டதும் எதிர்த்த வீட்டிலே இருந்தவர்கள் எல்லாம் எழுந்திருச்சு ஓடி வந்து அவங்க வீட்டைத் தட்டினார்கள் தட தட என்று!

இவன் சாவகாசமாக எழுந்திருச்சுப் போய் கதவைத் திறந்தான். என்னங்க இந்த இராத்திரி வேளையிலே எங்களையெல்லாம் ஏன் கூப்பிட்டீர்கள். யாருக்கு என்ன ஆகிவிட்டது என்று கேட்டார்கள் பக்கத்து வீட்டுக் கிருஸ்ணமூர்த்தி, எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் பங்கய வல்லி எல்லோரும் அடடே! உங்களைக் கூப்பிடவில்லை குழந் தைக்குப் பேர் வைக்கிறது சம்பந்தமாக எங்களுக்குள் சண்டை வந்து விட்டது... அதுதான் விஷயம் வேணும் என்றால் கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருக்கும் திருடனைக் கேட்டுப் பாருங்கள் அவன் தான் இதுக்கு சாட்சி என்றான்.

உடனே எல்லோரும் விஷயத்தைப் புரிந்து கொண்டு திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்களாம். நெருக்கடியான நேரங்களிலே பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படுகின்ற ஒரு குடும்பத் தலைவர் இருக்கிறார். அவர் என்ன செய்வார் தெரியுமா?

எல்லோரும் இராத்திரியானதும் வீட்டை உள்பக்கமாகப் பூட்டிக் கொண்டு தானே படுப்பார்கள்... அந்த அம்மா என்ன செய்வார் என்றால் வீட்டை வெளிப்பக்கமாகப் ஒரு பூட்டுப் போட்டு பூட்டி போடுவார். எதிர்த்த வீட்டுக்காரர்களிடம் சொல்லி தினமும் இப்படிப் பூட்டி விடச் சொல்லுவார்கள்...! ஏங்க இப்படி செய்கிறீர்கள்... திருடன் சுலமாக உள்ளே வந்து விடக்கூடாது என்பதற்காகவா என்று கேட்டேன்.

இல்லீங்க சுலபமாக வெளியே போய் விடக் கூடாது என்பதற்காக என்றார்கள். என்னங்க சொல்கிறீங்க என்றேன். ஆமாங்க இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு என்று தன் வீட்டுக்காரனைக் காட்டினார். பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் வீட்டைப் பூட்டி வைக்கிறது ஒரு பெரிய விடயம் இல்லையா?

யாழ்.மாநகரத்தின் சுகாதாரம் படுமோசம்!

மாபியாவைத் தடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

இந்நாள் முதல்வரிடம் முன்னாள் முதல்வர் கேள்வி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரத்தின் சுகாதாரத் திட்டங்கள் படுமோசமாகச் செல்கிறது என முன்னாள் முதல்வரும் தற்போதைய சபை உறுப்பினருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசா குற்றம் சாட்டினார்.

யாழ்.மாநகரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரத்தின் சுகாதாரம் தொடர்பில் கேள்வி கேட்கின்ற படுமோசமான நிலையை எட்டியுள்ள நிலையில் மாநகரத்தின் சுகாதாரத்தை சிறந்த முறையில் பேணவிடாமல் மாபியா செயற்படுவதாக தெரிவித்தீர்கள்.

இவ்வாறான நிலையில் தங்களின் அதிகாரம் கொண்டு குறித்த மாபியாவை ஏன் அடக்க முடியாமல் போனது எனக் கேள்வி எழுப்பினார்.

யாழ்மாநகரத்தீர்குட்பட்ட அனைத்து இடங்களிலும் குப்பை கூழங்கள், வடிகால்கள்சீரின்மை ஆகிய பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன.

யாழ்.மாநகர சபையில் உள்ள 213 அடோத் தொழிலாளர்கள் மற்றும் முதல்வரின் பிரத்தியேகப் பணியாளர்கள்உட்பட சகலருக்கும் நிதி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இவ்வாறான நிலையில் சுகாதாரம் தொடர்பில் ஏற்கக்கூடிய எவ்வித மாற்றமும் இல்லாமல் போனமை தமக்குக் கவலையளிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

யாழ்.மாநகர சபைக்கு எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை; உறுப்பினர்களின் தொலைபேசிக் கட்டணம் 57 இலட்சம் ரூபா

செயலாளர் நீண்ட விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபைக்கு2019ஆம் ஆண்டு எதிர்பார்த்த வருமானம் கிடைக்காத நிலையில்சபைஉறுப்பினர்களுக்காக வரவு- செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத தொலைபேசிக் கட்டணமாக சுமார் 57 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாகயாழ்மாநகர சீபையின் செயலாளர் அ.சீராளன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நேற்றுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இவ் வருடம் வருமானம் ஏன் குறைந்தது எனச் சபை உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருடம் 236 மில்லியன் ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்து கடந்த வருட இறுதியில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் ஆனால் 65 மில்லியன் ரூபாவையே வருமானமாக ஈட்டக் கூடியதாக இருந்தது.

217 மில்லியன்ரூபாய்வாடகை வருமானமாக எதிர்பார்க்கப்பட்ட போதும் கடந்த (30.09.2019) வரை 59 மில்லியன் ரூபாய் வருமானமாகக் கிடைத்தது.

இவ் வருடம் தண்டப்பணம் மூலம் வருமானமாக 19 மில்லியன் ரூபாய் எதிர்பார்க்கப்பட்ட போதும் (30.09.2019 வரை) 6 மில்லியன் ரூபாய் மட்டுமே கிடைத்தது. இந்நிலையில் இவ்வருட பாதீட்டில் ஒதுக்கப்படாத செலவுகளில் ஒன்றாக சபை உறுப்பினர்களின் தொலைபேசிக் கட்டணங்களுக்காக 2019 ஆவணி வரை 41இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் நிலுவை செலுத்தப்பட்ட நிலையில் ஆடி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை 15 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் இன்னும் செலுத்தப்பட வேண்டும்.

யாழ்.மாநகர சபைக்கு 2018 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வழங்கப்பட்ட 12 மில்லியன் ரூபாய்க்கான வேலைகள் காலதாமதம் மற்றும் வேறு சில காரணங்களால் மீண்டும் திறைசேரிக்குத் திரும்பியது.

குறித்த வேலைத்திட்டங்களை முடிவுறுத்துவதற்காக 11 மில்லியன் ரூபாய்களை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நீண்ட காலமாக ஓய்வூதிய நிலுவையில்உள்ளவர்களுக்கான ஓய்வூதியத்தை வழங்குவதற்கு கடந்த வருடம் 60 மில்லியன் ரூபாய்களை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய போதும் 115 மில்லியன் ரூபாய் வரை கொடுக்கப்பட்டது. இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சில்லறைக் கணக்காளர் கொடுப்பனவாக 49 மில்லியன் ரூபாய் கொடுக்கப்பட்டது. எனவே தான் இவ்வருடம் மாநகர சபையின் எதிர்பார்த்த வருமானக் குறைவும் எதிர்பார்க்கப்படாதசெலவுகள்மூலம் மாநகர சபையின் நிலையான வைப்பிலிருந்து பணத்தை எடுக்க வேண்டிய சூழல்ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

கம்பன் கழகம் நடத்தும் மாதாந்த இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் மாதாந்த இசையரங்குகளின் வரிசையில் இம்மாத நிகழ்வாக யாழ்.இராமநாதன் நுண்கலைப்பீட மாணவன் ஜெ.மதூஷிகனின் இசைக்கச்சேரி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீ ஜஸ்வர்யலக்ஷ்மி திருக்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வயலின் வித்துவான் எஸ்.திபாகரன், மிருதங்க வித்துவான் வை.வேனிலான், கஞ்சிரா வித்துவான் அ.ரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-7)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; 63 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கத்துடன் தொடர்பு பட்டதாக கைதுசெய்யப்பட்ட 63 பேரின் விளக்கமறியல் டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

நுவரெலியாவிலுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் தலைமையகத்தில் ஆயுதப்பயிற்சி பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.ரிஸ்வான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார். (இ-7)



உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் நீரிழிவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையப் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.அரவிந்தன், நரம்பியல் நிபுணர் வைத்தியர் கே.அஜந்தா, நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய வழக்கிலிருந்து விடுதலை

பயணத்தடையும் நீக்கம்

(கொழும்பு)

வீரகெட்டிய, மெதமுலன டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த தூபி மற்றும் நூதனசாலை நிர்மாணப் பணிகளுக்காக 33.9 மில்லியன் ரூபாய் அரச பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் தொடரப்பட்ட வழக்கிலிருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ விடுவிக்கப்பட்டார்.



டீ.ஏ. ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு அரச நிதியைப் பயன்படுத்தியதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வந்தது.

குறித்த வழக்கு விசாரணை கள் சம்பத் அபயகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலை யில் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் குறித்த வழக் கிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுதலை செய்யப் படுவதாக, கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நேற்று அறிவித்தனர்.

அத்துடன் கோட்டாபயவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணம் தொடர்பான தடையும் நீக்கப்பட்டு, நீதிமன்றின் பொறுப் பிலிருக்கும் அவரது கடவுச்சீட் டைக் கையளிக்குமாறும் உத்தர விடப்பட்டது.

முன்னதாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட டுத்தாபனத்துக்கு சொந்தமான 33.9 மில்லியன் ரூபாய் பண த்தை நம்பிக்கை மோசடி செய் தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் தற் போதைய ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் நிரந்தர விசேட மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தமை குறிப்பிடத்தக் கது. (இ-7)

சந்திரிகாவின் செயற்பாட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களுக்கே தலைகுனிவு

தயாசிறி கரும் சீற்றம்

(பத்தரமுல்ல)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தீர்மானத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எடுத்த முடிவால் சுதந்திரக் கட்சி யின் ஆதரவாளர்களுக்கே தலை குனிவு ஏற்பட்டுள்ளதாக தெரி வித்த கட்சியின் பொதுச் செய லாளரும் பாராளுமன்ற உறுப்பி னருமான தயாசிறி ஜெயசேகர தேர்தல் பிரசாரங்கள் எவ்வாறு இடம்பெற்றாலும் மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத் தையில் அமைந்துள்ள பொது ஜன பெரமுனவின் காரியால யத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்,

எமது கட்சியின் தீர்மானத்தை கருத்திற் கொள்ளாது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டா ரநாயக்க குமாரதுங்க சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கி அவர்களுடன் இணைந்து செயற் பட்டார்.

இதனால் என்ன பயன் கிடைத் தது? எமது கட்சி ஆதரவாளர் களுக்கே தற்போது தலைகுனிவு ஏற்பட்டுள்ளது. அவர் தேர்தல் முடிவுற்றதை அடுத்து வெளிநாடு சென்று விடுவார்.

ஆனால் எமது ஆதரவாளர் கள் இங்குதான் இருக்க வேண் டும். மக்கள் அனைவரும் கோட் டாபயவை போன்ற சிறந்த தலை வரை ஆட்சியில் அமர்த்தவே விரும்பியிருந்தனர்.

சந்திரிகாவின் இந்தச் செயற் பாட்டால் ஏதாவது மாற்றம் ஏற் பட்டதா? அவரது ஆசனமான அத்தனகல்லவிலும் எமது வேட் பாளர் கோட்டாபயவே வெற்றி பெற்றார்.

தேர்தல் பிரசாரங்களின் போது யார் எவ்வாறான பிரசா ரங்களை முன்னெடுத்தாலும் மக்கள் தெளிவாகவே இருந்துள் ளனர். அதனாலேயே மக்கள் சரியான முடிவை எடுத்துள்ள னர்.

தெற்கில் ஊடகங்கள் கவ னத்திற் கொள்ளாத விடயங் களைக்கூட வடக்கு ஊடகங்கள் பிரதான செய்திகளாக வெளியிட் டிருந்தன. அதனால் வடக்கு, கிழக்கு மக்களின் எண்ணங் களில் மாற்றம் ஏற்பட்டன.

இதுவரை காலமும் இருந்த அரசியல் வரலாற்றில் மாற் றத்தை ஏற்படுத்தும் வகையில் இம்முறை தலைவரொருவர் எமக்குத் கிடைத்துள்ளார்.

எந்த அரசியல் கட்சிகளி லும் பங்கு கொள்ளாத ஒருவர் தற் போது நாட்டுக்குத் தலை வராகக் கிடைக்கப் பெற்றுள் ளார்.

அவரது வருங்கால செயற்பா டுகளுக்கு கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்புடன் செயற் படுவோம் எனவும் தெரிவித் தார். (இ-7)

கோட்டாபயவின் வெற்றியையடுத்து இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம்

தினேஷ், டளஸ் மகிழ்ச்சி

(பத்தரமுல்ல)

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் வெற்றியை அடுத்து இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று எழுதப்பட் டிருக்கிறது.

பிரச்சினைகளுக்குத் தீர்வு களைக் காணவேண்டிய அவ சியத்தில் நாடு இருந்தபோது மக்கள் சிந்தித்து சரியான தீர் ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்று கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களில் ஒருவரான தினேஷ் குணவர்த்தன தெரிவித் தார்.

பத்தரமுல்லையிலுள்ள பொது ஜன பெரமுனவின் காரியால யத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந் திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் பிரசார நடவடிக் கைகளின் போதும் கோட்டாபய சிறந்த மற்றும் வினைத்திறன் மிக்க பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். தேர்தல் கள் ஆணைக்குழுவின் ஆணை யையும் மீறி அரசாங்கம் சுவ ரொட்டிகள், பதாகைகளை ஒட் டிய போதிலும், கோட்டாபய இவற்றைத் தவிர்க்குமாறு குறிப் பிட்டு சிறந்த அமைதியான பிர சார நடவடிக்கைகளை முன்னெ டுத்தார்.

இதனாலே எமது வேட்பாள ருக்கு எதிராக ஆளும் தரப்பினர் பொய்க் குற்றச்சாட்டுகள் மற்றும் வதந்திகளைப் பரப்பியபோதும் மக்கள் அவற்றைக் கருத்திற் கொள்ளாமல் அவரை ஆதரித் தனர்.

தேர்தல் வெற்றியின் பின்னர் அவர் பதவியேற்றதை அடுத்து அவர் கருத்துத் தெரிவித்த போது தமக்கு ஆதரவாக மற்றும் எதி ராக வாக்களித்த அனைவரை யும் தம்முடன் இணைந்து செயற் படுமாறு குறிப்பிட்டு அனைவ ருக்கும் அழைப்பு விடுத்தார். ஒரு சிறந்த தலைவருக்குரிய விசேட தன்மையாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரி வித்த பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவிக் கையில்,



தேர்தல் முறைகேடுகள் குறைவாக பதிவு செய்யப்பட்ட தேர்தலாக இந்த ஜனாதிபதித் தேர்தல் வரலாற்று சிறப்பு பெறும். தேர்தல் முறைகேடு களை இதுவரையும் கட்டுப்ப டுத்தி வந்தது போல் இனிவரும் காலங்களிலும் அதனைப் பாது காத்துக் கொள்வதற்காக அனை வரும் செயற்பட வேண்டும்.

தேர்தல் பிரசார நடவடிக்கை களின் போது சில அமைச்சர் களால் இரு ஊடகங்களுக்கு பெரும் அச்சுறுத்தல்கள் விடுக்கப் பட்டன.

ஆனால் ஊடகங்கள் அதற்கு கட்டுப்படாமல் செயற்பட்டமை தொடர்பில் ஊடகங்களை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதற் தடவையாக அதிக வாக் குகளால் எமது வேட்பாளரை வெற்றியடையச் செய்துள்ளனர்.

எதிரணியினர் எமது வேட் பாளரின் நற்பெயருக்குக் களங் கம் ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத் திருந்தனர்.

அதற்காக போலி ஆவணங் கள், காணொலி காட்சிகளை யும் வெளியிட்டனர். இம்முறை தேர்தலின் போது கோட்டாபய விற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அரசியல்வாதிகளை புறந்தள் ளிவிட்டு தொழிற்சங்கங்கள், கலைஞர்கள், பல்வேறு துறை சார்ந்தவர்கள் முன் வந்திருந்த னர்.

தேர்தல் முறைகேடுகள் குறை வான தேர்தலான இந்தத் தேர் தல் வரலாற்று சிறப்பு பெறும். இந்த அனைத்து வெற்றிகளுக் கும் காரணம் எமது வேட்பா ளரின் சிறந்த வேலைத்திட்டமே யாகும்.

நாம் வெற்றியைப் பகிர்ந்து கொள்வதுடன் இதற்கான முழு மதிப்பையும் கோட்டாபய ராஜ பக்ஷவிற்கு கொடுக்க வேண் டும்.

இலங்கை வரலாற்றில் மே 18 ஆம் திகதி சிறப்பு பெறுவதைப் போல் சிறந்த தலைவர் ஒருவர் நாட்டைப் பொறுப்பேற்ற தினம் என்பதால் நவம்பர் 18ஆம் திகதி யும் சிறப்பு பெறும்.

இவர் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளைப் தவிர்த்தமை யாலேயே பெருமளவான முறை கேடுகள் கட்டுப்படுத்தப்பட்டன. தேர்தலின் பின்னர் சில வன் முறைச் சம்பவங்கள் பதிவா கியுள்ள போதிலும் இதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு எமது ஆதரவாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

வெற்றியை எளிமையான முறையில், யாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கொண் டாடுவோம்.

ஏன் நாம் எப்போதும் போல் ஒருவருக்கு ஒருவர் எதிராகச் செயற்பட வேண்டும்? நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து ஒரே நாடு, ஒரே சட்டம் என்னும் அடிப்படையில் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அரசாங்கம்-புலிகளுக்கு இடையிலான மோதலை சிங்கள, தமிழ் மோதலாக சித்திரித்தமை தவறு

நாமல் சுட்டிக்காட்டு; மோடிக்கு நன்றி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதலை சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மோதலாக சித்திரித்தமை தவறான விடயமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளிவிவகாரக் கொள்கை குறித்து முற்போக்கான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆட்சி மாற்றத்தின் பின் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் மத்தியிலான உறவுகள் குறித்து பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டதுடன் தலைவர்களுக்கும் பிழையான செய்தி தெரிவிக்கப்பட்டது.

இந்திய எல்லைக்கப்பால் உள்ள பிராந்திய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் இந்தியப் பிரதமர் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் இதனைத் தாங்களும் நம்புவதாக நாமல் தெரிவித்தார்.

இலங்கை மக்களின் ஆணையை ஏற்றுக்கொண்டமைக்காக இந்தியப் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்த நாமல் இலங்கையில் ஸ்திரமான அரசாங்கம் அமைவது இந்தியாவிற்கும் சிறந்த விடயம் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் சிலர் தங்கள் தனிப்பட்ட நலன்களுக்காக இலங்கை விவகாரத்தைப் பயன்படுத்துகின்றனர் என நாமல் மீண்டும் குற்றம்சாட்டினார்.

இவர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக என்ன செய்து விட்டார்கள் எனக் கேள்வியெழுப்பியுள்ள நாமல், இந்த அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு ஏதாவது செய்துள்ளார்களா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இலங்கை 30 வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது என்றும் தாங்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போராடிய போதிலும் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான மோதல் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் எதிரான மோதலாக சித்திரிக்கப்பட்டதாகவும் இது முற்றிலும் பிழையானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மக்களைச் சந்தித்து நன்றி கூறிய சஜித்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் புதிய ஜன நாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ நேற்று தனது ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தனக்கு தேர்தல் காலத்தில் வழங்கிய உதவிக்கும் வாக்களித்தமைக்காகவும் நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த பொதுமக்கள் சந்திப்பானது நேற்று கொழும்பு வொக்ஷால் வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. (இ-7)

மனோ-கிரியெல்ல இடையே ரணில் முன் அலரிமாளிகையில் கடும் வாக்குவாதம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மனோ கணேசனுக்கும் லக்ஷ்மன் கிரியெல்லவுக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சி கண்டியில் தோல்வியடைய மத்திய அதிவேக வீதி நிர்மாணத்தில் ஏற்பட்ட தாமதமே காரணமென லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதன்போது கிரியெல்லவின் கருத்தை நிராகரித்த அமைச்சர் மனோ கணேசன், மத்திய அதிவேக வீதி நிர்மாண தாமதம் தோல்விக்குக் காரணமல்ல என்றும் நீங்கள் கண்டியில் தேர்தல் பிரசாரப் பணிகளில் முறையாக ஈடுபடாததே தோல்விக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து இரண்டு பேருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தான் கண்டி மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் ஒழுங்கான முறையில் பிரசாரங்களை முன்னெடுத்ததாக கிரியெல்ல தெரிவித்தார்.

எனினும் தேர்தல் முடிவுகளின் பின்னர் மலையகப் பகுதிகளில் தமிழ் மக்கள் தாக்கப்படுவதாகவும் அது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மனோ கணேசன் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை தோட்டப்பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்படுவது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்றும் மனோ கணேசன் கூட்டத்தின்போது வலியுறுத்தினார். (இ-7)

யாழ்ப்பாணம் பாதுகாப்புப்படைக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவின் எண்ணக்கருவிற்கமைய, 5 ஆவது இலங்கை இராணுவ சேவை படைப்பிரிவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் பாலாலி இராணுவ முகாமில் 2019.11.21 அன்று காலை நடைபெற்றது. இம்முகாமில் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய மற்றும் இராணுவத்தினர் இரத்தானம் வழங்கியிருந்தனர். இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் இரத்தத்தை பெற்றுக்கொண்டனர்.

போதை மாத்திரைகள் கேரளக் கஞ்சாவுடன் நேற்று ஒருவர் கைது

(கிண்ணியா)

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பைசல் நகர் பிரதேசத்தில் நேற்றுக் காலை போதை மாத்திரை மற்றும் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததாக திருகோணமலை மாவட்ட பிராந்திய விசத்தன்மையுடைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.



குறித்த நபர் 36 வயதுடையவர் என்றும் அவரிடமிருந்து 41 போதை மாத்திரைகளும் 3 கிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றியதாக தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் மிகவும் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆலோசனை

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக மிகவும் எச்சரிக்கையாகவும் அவதானத்துடனும் செயற்படுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்கிரமரட்னவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களால் எந்தவொரு அரசியல் பழிவாங்கல், கடத்தல் அல்லது தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என மக்கள் மத்தியில் எந்தவிதமான தேவையற்ற

பீதியை ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் நாட்களில் பாதுகாப்புக் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிக கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்றுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நாட்டின் பாதுகாப்பு குறித்து மேலும் விழிப்புடன் இருக்குமாறும், அந்தந்தப் பகுதிகளின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தூர நோக்கிற்கு அமைய இன, மத மற்றும் அரசியல் வேறுபாடுகள் இல்லாத ஒரு நாட்டை உருவாக்கும் வகையில் நாட்டில் அமைதியான சூழலைப் பேணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே, மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மேலும், அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நபர்களுக்கும் அல்லது குழுக்களுக்கும் எதிராக, தராதரம் பாராமல் சட்டத்தை கடுமையாக செயற்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ)

குளவிக்கொட்டுக்கு இலக்கான தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ, செல்வகந்த தோட்டத்தில் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த 7 பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

பொகவந்தலாவ செல்வகந்த தோட்டத்தில் உள்ள 5 ஆம் இலக்க தேயிலை மலையில் உள்ள மரம் ஒன்றில் இருந்த குளவிக்கூடு கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளதாக காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்கு உள்ளான ஏழு பெண் தொழிலாளர்களும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் குறித்து அச்சமடையத் தேவையில்லை எனவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஜ)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1895

Search for people, places and things

கஜீபன்

உன் மேல நான் ரொம்ப Bru வச்சுருக்கேன் டீ செல்லம்... என்னது Bru va... ஏன்னா அன்பின் பெயர் Bruனு இப்பதான் விளம்பரத்துல சொன்னாங்க...

பிரகாஷ்

என் பொண்டாட்டி சமையலை வாயில வைக்க முடியாது. அவ பேச ஆரம்பிச்சா பைத்தியமே பிடிச்சிடும்... யோவ்.. பாங்க்ல வந்து ஏன்யா இதையெல்லாம் சொல்றே...?

நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்க!

அபயன்

அம்மா:
டேய் ஏண்டா முடிய நீளமா வளத்துகிட்டு ரப்பர் பேண்டெல்லாம் மாட்டிட்டு அலையறே..?
பையன்:
இதுதாம்மா இப்போ ஃபேஷன்
அம்மா:
நாயே ... உங்க அக்காவ பொண்ணுபாக்க வந்தவங்க உன்ன பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டு போயிருக்காங்க...

லதா

ஆண்டி... கழுத்த அறுக்க வந்துட்டீங்களா?
ஏன் பாப்பா இப்படி சொல்றே?
ஒவ்வொரு தடவையும் நீங்க வந்துட்டு போனபின் என் மம்மி அப்பிடித்தான் சொல்வாங்க...

மேனகா

அதிகம் நடக்க வைப்பது இரண்டு விடயங்கள் மட்டும் தான் ஒன்று சுகர் இன்னொன்று பிகர்...

தர்மினி

மனைவி: எல்லை தாண்டிய பயங்கரவாதம் அப்படினா என்னங்க???

கணவன்: நீ என்மேல பூரிக்கட்டையை தூக்கி எறியும் போது அது தெருவுல போறவங்க மேல படுதுல்ல அதான்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

உயர் கல்வி வளர்ச்சி

(கொழும்பு)

நாட்டின் உயர் கல்வி வளர்ச்சி அதிகரித்துக் காணப்படுவதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமா மற்றும் வியாபார நிர்வாகமாணி முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு ஆகிய கற்கை நெறி அங்குராப்பண வைபவம் அண்மையில் ஒலுவில் வளாகத்தில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். அந்த வகையில் இக் கற்கை நெறியைப் பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நீங்கள் இதன் மூலம் கூடிய வருமானத்தை பெறுவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்ய முடியும்.

கல்வியாளர் ஒருவர் தனது தொழிலுடன் மட்டும் நின்று விடாது மேற்படிப்புகளை மேற்கொள்வதன் மூலம் உலகளாவிய ரீதியில் பெரும் செல்வாக்கினை பெறுவதோடு உயர்ந்த தொழில் வாய்ப்புக்களையும் பெற முடியும்.

இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினை வழங்கி வரும் இப் பல்கலைக்கழகம் சர்வதேச மட்டத்தில் ஒரு முன்மாதிரியான பல்கலைக்கழகமாக மாறி இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

இப் பல்கலைக்கழகம் பிரதேசம் சார்ந்த இவ்வாறான பட்டப்பின்படிப்புகளை ஆரம்பித்து நாட்டின் உயர் கல்விக்கு பெரும் பங்காற்றி வருவதனை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அப்புத்தளை பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றம்

(அப்புத்தளை)

அப்புத்தளை பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் பதினொரு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அப்புத்தளை பிரதேச சபைத் தலைவர் பி.கந்தசாமி கண்ணா தலைமையில் சபையின் நிதி அறிக்கை சமர்ப்பிக்கும் அமர்வு, நேற்று சபையின் தியத்தலாவை மண்டபத்தில் நடைபெற்றது.

சபை நடவடிக்கைகள் ஆரம்பித்ததும் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி அறிக்கையை, சபைத் தலைவர் சபையில் சமர்ப்பித்தார். அதையடுத்து, நிதி அறிக்கை மீதான வாத, விவாதம் இடம்பெற்று இறுதியில் வாக்கெடுப்பு இடம்பெற்றது. இவ்வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஏழு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஐந்து உறுப்பினர்களுமாக பன்னிரண்டு உறுப்பினர்கள் நிதி அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். சபையின் ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் மாத்திரம் நிதி அறிக்கைக்கு எதிராக வாக்களித்தார். இதனடிப்படையில் பதினொரு மேலதிக வாக்குகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கை நிறைவேற்றப்பட்டது. சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அறுவரும், வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேச செயலகம், நண்பர்கள் வட்டம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

புரிசில் நாள்

(கொடிகாமம்)

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை அதிபர் திருமதி தர்சினி வசந்தமாறன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)

தேர்தல் தினத்தன்று கடத்தப்பட்ட 20 வயது யுவதி பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

நிக்கவரெட்டி பிரதேசத்தில் கடந்த தேர்தல் தினத்தன்று கடத்திச் செல்லப்பட்ட 20 வயதுடைய யுவதியை பொல்பித்திகம பிரதேச வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்டதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வஏனுடன் இரு சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த யுவதி கொழும்பு பிரதேசத்தில் தொழில் செய்து வருபவர் என்றும் கடந்த 16 ஆம் திகதி வாக்களிப்பதற்காக வீட்டுக்கு வந்து பின்னர் நிக்கவரெட்டி இஹலகம பிரதேசத்தில் வசிக்கும் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் கடத்தப்பட்டதாக குறித்த யுவதியின் சகோதரியினால் நிக்கவரெட்டி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அம்பன்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வய்துடைய இளைஞர்,

குறித்த யுவதியின் முன்னாள் காதலர் என்றும் மாஹோ பிரதேசத்தில் வாடகைக்குப் பெறப்பட்ட வானில் இரண்டு நண்பர்களின் ஒத்துழைப்போடு அவ் யுவதியைக் கடத்திச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ஐ)

வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(புலத்சிங்கள)

புலத்சிங்கள பகுதியில் வெளிநாட்டுத்துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

புலத்சிங்கள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எகல்வோய பகுதியில் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா.விக்ரோறியா கல்லூரியின் 2019 உயிரியல் பிரிவில் மாணவி கீர்த்தனா தமிழ்மாறனின் "சிறகு முளைத்து எழு" என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமாரன் தலைமையில் இடம் பெற்றது. கவிதைத் தொகுதியை அதிபர் வெளியிட்டு வைக்க வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ம.பா.மகாலிங்கசிவம் பெற்றுக் கொண்டார். (இ-5-64)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	100	100	120	100
உருளைக்கிழங்கு	140	130	120	120	140
பச்சைமிளகாய்	280	250	250	260	250
தக்காளி	100	100	100	80	100
மரவள்ளிக்கிழங்கு	120	100	100	80	80
கோவா	140	120	120	110	140
கரட்	250	290	240	200	350
பூசணி	50	80	60	80	60
புடோல்	80	100	80	80	80
வாழைக்காய்	60	80	80	80	100
சின்ன வெங்காயம்	350	380	300	300	400
பெரிய வெங்காயம்	160	180	120	120	160
பாகற்காய்	150	200	160	160	160
வெண்டிக்காய்	30	40	60	70	80
கருணைக் கிழங்கு	60	80	80	80	120
பயற்றங்காய்	150	160	140	130	150
லீக்ஸ்	250	280	300	210	350
பீற்றூட்	280	120	200	70	200
கறிமிளகாய்	300	260	240	220	200
முருங்கைக்காய்	400	800	400	300	320
போஞ்சி	120	120	120	100	80
கத்தரிதம்புள்ள	80	60	80	90	80
கீரை-1பிடி	40	50	80	40	40
தேசிக்காய்	150	300	160	160	200
தேங்காய் (ஒன்று)	50	45	40	45	30-50
இராசவள்ளி	250	–	300	150	250
வெங்காயப்பூ	–	–	–	–	–
முள்ளங்கி	120	80	100	40	120
பொன்னாங்காணி	40	40	50	30	40
வல்லாரை	20	50	20	30	20
ஈரப்பலா	60	110	60	150	100



கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கம் வருடந்தோறும் நடத்தும் "ஓர் வருடம் ஓர் வித்தியாலயம்" என்னும் தொனிப்பொருளிலான ஆறுமுகநாவலர் குருபூசை நேற்று முன்தினம் யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்குருபூசை நிகழ்வில் சிறப்புரையை சைவப்புலவர் கந்த சத்தியதாஸ் வழங்கினார்.

தினமும் ஒரு விருந்தினர்

நான் ஒருமுறை ஈரோட்டுக்குச் சென்றபோது, என் நண்பனின் அலுவலகத்தில்தான் முத்துசாமியைச் சந்தித்தேன்.

என் நண்பன் ஒரு வங்கியில் மேலாளராக இருந்தான். வங்கியில் அவன் அறையில் அமர்ந்து அவனுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, அவனைப் பார்க்க வந்த முத்துசாமியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். அந்த வங்கியின் வாடிக்கையாளரான அவர் சிறிய அளவில் ஜவுளித் தொழில் செய்து வருவதாக அறிந்து கொண்டேன்.

நான் சென்னையில் பணிபுரிவதையும் அலுவலக வேலையாக ஈரோட்டுக்கு வந்திருப்பதையும் அங்கே ஒரு ஹோட்டலில் தங்கியிருப்பதையும் அவரிடம் சொன்னான் என் நண்பன்.

சற்று நேரம் பொதுவாகப் பேசியபின் முத்துசாமி என்னிடம் "சேர், நீங்கள் இன்று மதியம் என் வீட்டுக்குச் சாப்பிட வாருங்களேன்" என்றார்.

சில நிமிடங்களுக்கு முன்பே அறிமுகமான என்னை அவர் தன் வீட்டுக்குச் சாப்பிட அழைத்தது எனக்கு வியப்பாக இருந்தது. அவர் அழைப்பை ஏற்று அவர் வீட்டுக்குச் செல்லவும் தயக்கமாக இருந்தது.

"இல்லை சேர் இன்னொரு சமயம் பார்க்கலாம்" என்றேன்.

"போயிட்டு வாடா. அவரைப் பற்றி நீ தெரிஞ்சுக்கணும்" என்றான் நண்பன்.

"சேர், உங்க மனைவிதான் ஊரில இல்லையே, நீங்களும் வாங்க" என்று என் நண்பனையும் அழைத்தார் முத்துசாமி.

"இல்லை சேர். எனக்கு ஆபிஸ்ல ஒரு முக்கியமான வேலை இருக்கு. என் நண்பன் மிஸ்டர் தண்டச்சோறு வருவான்" என்று என்னை மாட்டி விட்டான் நண்பன்.

"இல்லை சேர்" என்று நான் மறுக்க முயன்றேன்.

"டேய்! மிஸ்டர் முத்துசாமி பல வருடங்களாக ஒரு பழக்கம் வைச்சிருக்காரு. தினமும் யாராவது ஒருத்தரை அழைத்துச் சாப்பாடு போடணும்கிறதுதான் அது. என்றைக்காவது ஒருநாள் விருந்தினர் யாரும் கிடைக்காட்டா, தானும் சாப்பிடக்கூடாது எனீபது அவருடைய கொள்கை. ஆனால் இதுவரை அப்படி நேரவில்லை. என்ன சேர், சரிதானே?" என்றான் நண்பன்.

"நல்ல கொள்கைதான். எத்தனையோ ஏழைகள் இருக்காங்க. அவங்க யாருக்காவது சாப்பாடு போடலாமே! என்னை மாதிரி ஆளுங்களுக்கு எதுக்குச் சாப்பாடு போடணும்?" என்றேன் நான்.

"சேர்! நான் செய்யிறது அன்னதானம் இல்லை. அதுக்கு எனக்கு வசதியும் இல்லை. நான் செய்யிறதெல்லாம் நான் சாப்பிடுகிற எளிய உணவை தினமும் யாராவது ஒருத்தரோடு பகிர்ந்துக்கிறது தான்"

"இருக்கட்டுமே சேர்! யாருக்குத் தேவையோ அவங்களுக்குச் சாப்பாடு போடலாமே? அதை விட்டுட்டு...."

"டேய் முட்டாள்! அவர் செய்யிறது அன்னதானம் இல்லை, அதிதிக்கு உணவு படைக்கிறது" என்றான் நண்பன்.

"சேர்! நான் அதிகம் படிச்சவன் இல்லை. நாம சாப்பிடுகிற சாப்பாட்டை தினமும் யாராவது ஒருத்தரோடு பகிர்ந்துக்கணும்னு ஒரு வழக்கம் வைச்சுக்கிட்டிருக்கேன். நீங்க சொல்லுற மாதிரி ஒரு ஏழைக்குச் சாப்பாடு போடுறது நல்லதுதான். ஆனா எத்தனையோ ஏழைகளில் தினமும் ஒருத்தரை நான் எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்?

"ஏழைகளுக்குச் சாப்பாடு போடுறதுன்னா நிறையப் பேருக்குப் போடணும். ஒரு தனி மனிதனால் அதுவும் என்னை மாதிரி அதிக வசதி இல்லாதவனால் இதைச் செய்ய முடியாது. ஒரு ஏழைக்கு நான் சாப்பாடு போட்டா அது நான் அவனுக்குச் செய்யிற உதவி. ஆனா உங்களை மாதிரி ஒருத்தர் என் வீட்டுக்கு விருந்தாளியா வந்து சாப்பிட்டீங்கன்னா அது நீங்க எனக்குச் செய்யிற உதவி" என்றார் முத்துசாமி.

"அது எப்படி?" என்றேன்.

"நீங்க ஒரு நல்ல ஹோட்டல்ல போய் உங்களுக்கு விருப்பமானதைச் சாப்பிடலாம். ஆனா நீங்க அதை விட்டுட்டு என் வீட்டுக்கு வந்து நான் சாப்பிடுற எளிய உணவைப் பகிர்ந்துக்கிட்டீங்கன்னா அது எனக்குச் செய்யிற உதவிதானே!" என்றார்.

அதற்குப் பிறகு அவர் வீட்டுக்குச் சென்று உணவருந்தினேன். அவர் சொன்னபடி உணவு எளிமையாகத்தான் இருந்தது. தினமும் சாதாரணமாக அவர்கள் வீட்டுக்குச் சமைக்கும் உணவை யாராவது ஒருவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதானே அவர் கொள்கை?

"தினமும் யாராவது ஒருவரைத் தேடி அழைச்சிக்கிட்டு வாரது உங்களுக்கு சிரமமாக இல்லையா?" என்றேன்.

"அது கஷ்டமான வேலைதான். ஆனால் இதுவரை தினமும் எனக்கு யாராவது கிடைச்சுக்கிட்டுத்தான் இருக்காங்க. இன்றைக்கு வாங்குக்குப் போன போது அங்கே உங்களைச் சந்திப்பேன்னு எதிர்பார்த்திருப்பேனா?" என்றார் முத்துசாமி.

"எங்களுக்கெல்லாம் எப்பவாவது விருந்தாளிகள் வந்து ரெண்டு மூணு நாள் தங்கினாலே முழி பிதுங்கி விடுகிறதே. நீங்கள் எப்படி தினமும் ஒரு விருந்தாளியைச் சமாளிக்கிறீர்கள்?" என்ற கேள்வி என்மனதில் எழுந்தது. ஆனால் நான் இதைக் கேட்கவில்லை!

இதற்குப் பிறகு கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு என் நண்பனைச் சென்னையில் சந்தித்தபோது முத்துசாமியைப் பற்றி விசாரித்தேன்.

"அவர் இன்னும் தன்னுடைய யாகத்தைத் தொடர்ந்து பண்ணிக்கிட்டிருக்காரா?" என்றேன் பாதி விளையாட்டாகவும் பாதி சீரியஸாகவும்.

"அவர் செய்யிறதை யாகம்னு தான் சொல்லணும். போன வருடம் ஒரு பொருளாதாரப் பிரச்சினையால ஜவுளித் தொழில் செய்யிறவங்களுக்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. உனக்குத் தெரிஞ்சிருக்குமே! முத்துசாமி மாதிரியான சிறிய வியாபாரிகளுக்கு பலமான அடி. நிறையப் பேரு வியாபாரத்தையே நிறுத்திட்டு வேலை ஏதாவது கிடைக்குமான்னு பாக்க ஆரம்பிச்சுட்டாங்க"

"முத்துசாமி?"

"அவருமாதிரி ஒண்ணு ரெண்டு பேருதான் இந்த அடியிலிருந்து மீண்டு எழுந்து வந்தாங்க. நடுவில சில காலம் ரொம்பக் கஷ்டப்பட்டாரு. அப்பவும் தினமும் யாருக்காவது சாப்பாடு போடணும்கிற தன்னுடைய கொள்கையை அவர் விடலை"

"எப்படி சமாளிச்சாரு?"

"நான் கேட்டதுக்கு அவரு என்ன சொன்னாரு தெரியுமா? "சேர் எங்க வீட்டில நாலு பேரு இருக்கோம். இந்தக் கஷ்டத்திலேயும் நாங்க நாலு பேரும் ஒரு நாள் கூட சாப்பிடாமல் இருந்தது இல்லை. நாலு பேருக்கு பதிலா அஞ்சு பேரு இருந்தாலும் அப்படியேதானே இருந்திருப்போம்? அஞ்சாவது நபரா, விருந்தாளி இருக்காரு. அவ்வளவுதானே?" அப்படின்னாரு. அதிர்ஷ்ட வசமா நிலைமை முன்னேறி இப்ப மறுபடி கொஞ்சம் கொஞ்சமா பழைய நிலைக்கு வந்துக்கிட்டிருக்காரு"

"இன்னொருத்தருக்குச் சாப்பாடு போட்டுட்டுத்தான் சாப்பிடணும்கிற உறுதி இருக்கிறவரைக்கும், எந்தப் பிரச்சினையும் அவரை பாதிக்காதுன்னு நினைக்கிறேன்"

ஒரு நல்லெண்ணத்தில் நான் இப்படிச் சொன்னாலும் அப்படித்தான் நடக்கும் என்ற நம்பிக்கை என் மனதில் ஆழமாக நிலை பெற்றிருந்தது.

குறள் 83

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பொருள்:

விருந்தினரை நாள்தோறும் உபசரித்து வருபவன் வாழ்க்கையில் துன்பம் வந்து அதனால் அவன் வாழ்வு சிதையும் நிலை ஏற்படாது.

பழமொழிகள்

- இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.
- காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி.
- வெளுத்ததெல்லாம் பாலல்ல.
- வருந்தினால் வாராதது இல்லை.
- காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?
- நமக்கு ஆகாதது நஞ்சோடு ஒக்கும்.
- பெண் வளர்த்தி பீர்க்கங் கொடி.
- விதி எப்படியோ மதி அப்படி.
- நீலிக்குக் கண்ணீர் இமையிலே.
- படையிருந்தால் அரணில்லை.
- எண் இல்லாதவர் கண் இல்லாதவர்.

இலங்கையின் முக்கிய நிலையங்கள்

- செய்மதி தகவல் தொடர்பு நிலையம்-பாதுக்கை.
- புடைவைக் கைத்தொழில் நிலையம்-வியாங்கொடை, பூகொட துல்கிரிய.
- எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம்-சப்புகஸ்கந்த.
- பிறிமா மாவு ஆலை-திருகோணமலை.
- விவசாய ஆராட்சி நிலையம்-மகாஇலுப்பள்ளம, இங்குராகொட, பதல்கொட.
- தாவரவியல் பூங்காக்கள்-பேராதனை, கனோபத்த, ஹக்கல.
- தேயிலை ஆராட்சி நிலையம்-தலவாக்கலை
- சோயா ஆராட்சி நிலையம்-பஷ்லேகலை, கண்ணொறுவ.
- ரயர் (டயர், டியூப்) தொழிற்சாலை-களனி.

வண்ணச் சிறகை விரிக்கிறாய்



வண்ணச்சிறகை விரிக்கிறாய்
வானில் பறந்து திரிகிறாய்
வண்ண மலரின் தேனையே
வயிறு நிறைய குடிக்கிறாய்
வானில் பறக்க உன்னைப்போல்

வண்ணச்சிறகு இல்லையே
வானில் பறக்க உன்னைப்போல்
வண்ணச்சிறகு இல்லையே
வண்ணச்சிறகு இல்லையே

கலங்காத உள்ளம் படைத்தவனே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.
– சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

பாலில் நெய் போல, விறகில் தீ போல சஜித்துக்குள் மறைந்திருந்த சமஷ்டி போல

திருவிளையாடல் என்ற பக்தி திரைப்படத்தை பார்க்காதவர்கள் யாரும் இருக்க முடியாது.

சிவபெருமானாக சிவாஜியும் தர்மியாக நாகேஸும் சம்பாசிக்கின்ற அழகுக்கு ஈடாக இதுவரை எதுவும் இல்லை எனலாம்.

இதற்கு மேலாக செண்பகப்பாண்டியனின் அரண்மனையில் சிவபெருமானும் நக்கீரரும் தர்க்கம் நடத்துகின்ற பாங்கு கண்டு வியக்காதவர்கள் யாருமில்லை.

ஆக, திருவிளையாடல் படம் என்று வெளியாகியதோ அன்றிலிருந்து சிவபெருமான் என்றதும் சிவாஜியின் தோற்றமே மனக்கண் தோன்றும்.

அந்தளவுக்கு சிவாஜி சிவபெருமானாகப் பாவனை செய்து நடித்தார்.

திருவிளையாடல் திரைப்படத்தின் தாக்கம் எவ்வாறாக இருந்தது என்பதற்குக் கீழ்வரும் நிகழ்வு தக்க சான்றாகும்.

ஒருமுறை திருமுருக கிருபானந்தவாரியார் கதாப்பிரசங்கம் செய்கிறார். பிரசங்கத்தின் இடையிடையே சிறுவர்களிடம் கேள்வி கேட்பதும் சரியான விடைக்குப் பரிசில் வழங்குவதும் வாரியாரின் வழமை.

அவ்வாறாக, சிவபெருமானின் மறுபெயர் என்ன என்று வாரியார் ஒரு சிறுவனிடம் கேட்க, அவன் எழுந்து சிவாஜி என்றான்.

அவனின் பதில் கண்டு அரங்கம் சிரிப்பொலியால் அதிர்ந்தது.

குறித்த மாணவன் மனம் கோணிவிடக் கூடாது என்று கருதிய வாரியார், சரியான பதில் என்றார். சபை அப்படியே அடங்கியது.

அன்பர்களே! சுவாமிகள், ஞானிகள் போன்றோரை "ஜி" என்று அழைப்பது வழமை.

இந்தச் சிறுவனும் சிவபெருமானை சிவா என்று வெறுமையாக அழைக்காமல் "ஜி" சேர்த்து சிவாஜி என்றான் எனக் கூற, கரகோசம் வானை அதிர வைத்தது.

அத்தகைய சிறப்புடைய கிருபானந்தவாரியார் முத்தி பற்றிப் பேசுகையில்; தில்லையில் பிறந்தால் முத்தி. திருவாரூரில் வாழ்ந்தால் முத்தி. காசியில் இறந்தால் முத்தி என்பார்.

ஆனால் அவர் ஆகாய வெளியில் – விமானத்தில் பயணிக்கும்போது மரணமாகினார்.

ஆக, அண்டவெளியிலும் ஆவி பிரியலாம். அது மோட்சத்துக்கு மிகக்கிட்டிய தூரம் என்பதை சொல்லாத வாரியார், தன்னூடாக அதை நிரூபித்தார் போலும்.

இதை நாம் கூறும்போது புதிய ஜனாதிபதி பதவியேற்றதுடன் உங்களுக்கும் ஞானம் வந்துவிட்டது போலும் என்று நீங்கள் நினைக்கலாம். அதுவன்று.

மாறாக திருமுருக கிருபானந்தவாரியார் வானுலகில் இருந்து எங்கள் வடமாகாணத்துக்கு வந்து, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சொற்பொழிவாற்றினால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்தோம். அதுதான் இது.

அன்பர்களே! ஈழத்து நண்பர்களே! அரசியலையும் தீபாவளிப் பண்டிகையையும் சம்பந்தப்படுத்துகின்ற தமிழ் அரசியல் விற்பன்னர்களே! அன்னத்தையும் கழுகையும் சமமாகப் பார்க்கின்ற சமவுடைமைவாதிகளே! இறைவன் நம் முன்னே மறைந்து நிற்கிறான்.

இதை நாம் கூறினால் எப்படி என்று கேட்பீர்கள். பாலில் நெய் போல, விறகில் தீ போல மறைந்துள்ளான் மாமணிச்சோதியன். என்ன இன்னும் விளங்கவில்லையா?

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்குள் சமஷ்டி மறைந்துள்ளது என்று நம் சம்பந்தப் பெருமானார் சொன்னாரே அதுபோல கடவுளும் மறைந்துள்ளான். மறைந்த சமஷ்டி சஜித்தைச் சரித்ததுபோல கடவுள் நம்மைச் சரியான். அவன் தாங்கி நிற்பான். நம்புங்கள். அதுவே சொன்னேன் சுகம்.

ஏலவிற்பனை

மன்னார் மாவட்ட/ நீதவான் நீதிமன்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட சுவல், கோடரி, மண்வெட்டி, படகு, வெளியிணைப்பு இயந்திரம், துவிச்சக்கரவண்டிகள், கைத்தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள், ஆட்டோ, உழவு இயந்திரம் மற்றும் இதர பொருட்களின் பகிரங்க ஏலவிற்பனை நாளை 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் பொருட்களைக்கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தம்முடைய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டுமெனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (9)

தாக்குதல் குறித்து உண்மை நிலையை அறிய ஐரோப்பிய குழு விஜயம்

(கேகாலை)

கணேமுல்ல தோட்ட மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்தின் உண்மையை தெரிந்து கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் குழு ஒன்று சம்பவ இடத்திற்கு விஜயம் செய்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கேகாலை மாவட்டம் கணேமுல்ல தோட்டம் மேற்பிரிவு லயன் குடியிருப்பினுள் நுழைந்த சிலர் தோட்ட மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தின் உண்மையை தெரிந்து கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் குழு சம்பவ இடத்திற்கு நேரடி விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டு மக்களிடம் நிலைமையை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைப் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

High Looks கல்லூரியின் பட்டமளிப்பு விழா நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற் பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கிளிநொச்சி அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் எம்.ஞானபாஸ்கரன், யாழ்.மாவட்ட செயலக சிறு கைத்தொழில் முயற்சிப் பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.சசீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது.
-வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

அன்பும் காமமும்

அன்பினால் ஒரு ஜடப்பொருள் கூட உயிர்பெறுகிறது. கற்களும் மரங்களும் கூட உன்னிடம் பேசுகிறது. சூரியனும் சந்திரனும் கடவுளின் முழுப்படைப்பும் உயிர்பெற்று தெய்வீகமாகின்றன.

காமத்தில் உயிருள்ளது கூட உயிரற்ற (ஜடப்) பொருளாகி விடுகிறது. நீ உயிருள்ள மனிதர்களைக் கூட, பொருட்களை உபயோகிப்பது போல் உபயோகிக்க விரும்புகிறாய்.

இங்கு அன்பு மற்றும் காமம் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பண்புகள் உள்ளன. அவை வித்தியாசமாக இருந்தாலும் மிகவும் நெருங்கியவை.

காமம் மன இறுக்கத்தைக் கொடுக்கிறது.
அன்பு ஓய்வைக் கொடுக்கிறது.
காமம் ஒரு பகுதியில் மனதை ஒருமுகப்படுத்துகிறது.
அன்பு முழுமையில் மனதை ஒருமுகப்படுத்துகிறது.
காமம் வன்முறையைக் கொண்டுவருகிறது.
அன்பு தியாகத்தைக் கொண்டுவருகிறது.
காமத்தில் நீ எல்லாவற்றையும் பறித்து உனதாக்கிக் கொள்ள விரும்புகிறாய்.
அன்பில் எல்லாவற்றையும் தந்து சரணடைய விரும்புகிறாய்.
காமம் நான் எதை விரும்புகிறேனோ அதைத்தான் நீ பெறவேண்டும் என்கிறது.
அன்பு நீ எதை விரும்புகிறாயோ அதை நீ பெற வேண்டும் என நான் விரும்புகின்றேன் என்கிறது. (தொடரும்)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் பாலாவோடை இணுவில், டச்சு வீதி சங்குவேலி, ஆர்க் வீதி உடுவில், உடுவில் மகளிர் கல்லூரி பிரதேசம், கரணவாய், இலகாமம், நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம் மந்தர்கடை, கிழவிதோட்டம், காளிகோவிலடி, யாக்கரு, கலிகை, அரசடி, வலிக் கந்தோட்டம், துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரம்மன் கோவிலடி, காளி கோவிலடி, வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை, தேவரையாழி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர், முடக்காடு, பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், திருநெல்வேலி ஒரு பகுதி, இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக தங்கு விடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஈரப் பெரியகுளம், செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி யிலும் மன்னார் பிரதேசத்தில் பரப்பாங்கண்டல், மாதோட்டம், மணல்குளம், இலந்தை மோட்டை, சூரிய கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒரே பெண் தந்தையின் பார்வையில் ஒருவிதமாகவும் தமையனின் பார்வையில் ஒருவிதமாகவும் காதலனின் பார்வையில் ஒருவிதமாகவும் காட்சியளிக்கிறாள். விருப்பும் வெறுப்பும் பொருட்களில்லை. காண்பவன் கண்களிலே.

- கி.ஆ.பெ.விசுவநாதம்

இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

தீய பழக்கத்தினின்றும் விலகுவதற்கு வஜ்ரம் போன்ற மனவுறுதிதான் இன்றியமையாதது. பெரியோர்களின் பழக்கம் சிறந்த சாதனையாகும். பொலிஸார் ஒருவர் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று அறிகின்ற ஒருவன் வீதியில் சிறுநீர் கழிக்கமாட்டான் அல்லவா? அதுபோல் தண்டனை தரக்கூடிய கடவுள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று திட்டவட்டமாக உணர்தல் வேண்டும். அந்த உணர்வு தீய பழக்கத்திலிருந்து நம்மை மீட்கும்.

ஆகவே ஆன்றோர் தொடர்பும் இறையுணர்வும் மனவுறுதியும் வேண்டும். இறைவனை நன்கு உபாசனை புரிதல் வேண்டும். அக்னிக்கு அருகில் பனி அண்டாது. அதுபோல் இறைவனை உள்ளத்தில் உபாசிப்பதனால் தீய எண்ணங்கள், தீய பழக்கங்கள் விலகிவிடும்.

அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

கார்த்திகை மாதத்தில் அசைவம் உண்ணக்கூடாதது ஏன்?

கார்த்திகை மாதத்தில் சூரியன் விருச்சிக இராசியில் சஞ்சாரம் செய்வதால், இம்மாதத்திற்கு விருச்சிக மாதம் என்றும் பெயருண்டு. கார்த்திகை மாதத்தில் பெரும்பாலும், கருமேகங்கள் சூழ்ந்துகொண்டு அதிகளவு மழை பொழிவை தரும். இதனாலும் இம்மாதத்திற்கு கார்த்திகை என்று பெயர் வந்தது எனலாம்.

கார்த்திகை மாதத்தின் முதல் நாளில் சூரியன் உதயமாகும் நேரத்தில், காவிரியில் நீராடுவது சிறப்பாகும். இதற்கு முடவன் முழுக்கு என்று முன்னோர்கள் பெயரிட்டுள்ளனர். ஐப்பசி மாதத்தில் நீராட முடியாதவர்கள் கூட, கார்த்திகை முதல் நாளில் காவிரியில் நீராடினால், ஐப்பசியில் துலா ஸ்தானத்தில் நீராடிய பலன் கிட்டும்.

கார்த்திகை மாதம் விரத மாதம் ஐயப்ப, முருக பக்தர்கள் மாலை போட்டு விரதம் இருப்பார்கள். இந்த மாதத்தில் அசைவு உணவுகளை உண்பவர்கள், மறு ஜென்மத்தில் புழு பூச்சிகளாக பிறவி எடுப்பார்கள் என்று பத்ம புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

கார்த்திகை மாதம், கலியுக தெய்வமான முருகன் மற்றும் ஐயப்பனுக்கு மட்டும் பிடித்த மாதம் கிடையாது. காக்கும் கடவுளான விஷ்ணு, அழிக்கும் கடவுளான சிவபெருமானுக்கும் உகந்த மாதமாகும். கார்த்திகை மாதத்தில், சந்திரன் பூமிக்கு மிக அருகில் வருவதால், சந்திரனின் ஒளி மிகவும் குளிர்ச்சியாகவும், அதிக பிரகாசத்துடனும் இருக்கும். இதன் காரணமாகவே, மற்ற மாத பௌர்ணமியை விட கார்த்திகை பௌர்ணமி சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. (தொடரும்)

இந்தியா-பங்களாதேஷ் அணிகள் மோதும் பகல்-இரவு டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

2 டெஸ்ட் தொடரில் இந்தூரில் நடந்த முதல் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இரண்டு அணிகளும் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் இன்று தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் போட்டி பகல்-இரவாக நடக்கிறது. வரலாற்றில் முதல் முறையாக இந்திய அணி பகல்-இரவு டெஸ்டில் விளையாடுகிறது. இதேபோல பங்காள தேஷ் அணியும் முதல் முறையாக பகல்-இரவில் ஆடுகிறது.

இந்த டெஸ்ட் வரலாற்று சிறப்பை பெறுகிறது. இந்திய மண்ணில் முதல்முறையாக நடை பெறும் இந்த பகல்-இரவு டெஸ்டை நடத்தும் வாய்ப்பை பாரம்பரிய மிக்க ஈடன் கார்டன் மைதானம் பெற்றுள்ளது. உள்ளூர் போட்டியான துலிப் டிராபி 2016 இல் பகல்-இரவாக நடத்தப்பட்டது.

விராட்கோலி தலைமையிலான இந்திய அணி இந்த டெஸ்டிலும் வென்று தொடரை 2-0 என்ற கணக்கில் வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

பகல்-இரவு டெஸ்டில் இளம் சிவப்பு நிற (பிங்க்) பந்துகள் உபயோகிக்கப்படும். இந்த வகையான பந்துகள் இந்திய வீரர்களுக்கு சவாலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இதற்காக வீரர்கள் கடந்த சில தினங்களாக சிறப்பு பயிற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் பலவீனமான பங்களாதேஷ்க்கு எதிராக விளையாடுவதால் இந்திய அணிக்கு பகல்-இரவு டெஸ்டில் எந்தவிதத்திலும் பாதிப்பு இருக்காது. பங்களாதேஷை எளிதில் வீழ்த்தி தனது வெற்றிப் பயணத்தை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டிங் மற்றும் பந்துவீச்சில் இந்திய அணி சமபலத்துடன் உள்ளது.

பட்டிங்கில் மயங்க் அகர்வால், ரோகித்சர்மா, தலை வர் கோலி, புஜாரா, ரகானே ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

இதில் தொடக்க வீரரான அகர்வால் கடந்த டெஸ்டில் இரட்டை சதம் அடித்தார்.

குறுகிய போட்டிகளில் இரண்டு முறை இரட்டை சதம் அடித்த 2 ஆவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

பந்துவீச்சில் முகமதுஷமி மிகவும் சிறப்பான நிலையில் இருக்கிறார். 2 ஆவது இன்னிங்சில் விக்கெட்டுகளை வீழ்த்துவதில் அவர் இந்திய அணிக்கு பக்கபலமாக இருந்து வருகிறார். முதல் டெஸ்டில் 7 விக்கெட் கைப்பற்றினார்.

இதேபோல வேகப்பந்தில் உமேஷ்யாதவ், இஷாந்த்சர்மா ஆகியோரும் சிறப்பாக வீசிவருகிறார்கள். சுழற்பந்தில் அஸ்வின், ஜடேஜா தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள்.

முதல் டெஸ்டில் 3 நாட்களில் வெற்றியை நிர்ணயித்த இந்திய வீரர்கள் பகல்-இரவு டெஸ்டிலும் அதுபோன்ற வெற்றியை பெறும் வேட்கையில் இருக்கிறார்கள். (க)

சிறந்த அணித்தலைவராக செயற்பட முடியும் நட்சத்திரவீரர் லசித் மலிங்க தெரிவிப்பு



இலங்கை இருபது-20 கிரிக்கெட் அணித்தலைவரும், நட்சத்திர பந்து வீச்சாளருமான லசித் மலிங்க, இருபது-20 போட்டிகளில் தான் இன்னும் விளையாட உள்ள காலம் குறித்து தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஓய்வு பெற்ற நிலையில் லசித் மலிங்க, தற்போது இலங்கை அணிக்காக இருபது-20 போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார்.

தற்போது அபுதாபியில் நடைபெற்று வரும் இருபது-10 தொடரில் நொர்தென் வொரியர்ஸ் அணிக்காக விளையாடி வரும் மலிங்க கூறியதாவது, உலகளவில் நடைபெற்று வரும் இருபது-20 தொடர்களில் நான் விளையாடியுள்ளேன். அந்த அனுபவம் எனக்கு உள்ளது. எனவே, ஒரு பந்து வீச்சாளராகவும், ஒரு சிறந்த அணித் தலைவராகவும் என்னால் செயற்பட முடியும்.

அத்துடன், நான் இன்னும் 2 வருடங்களுக்கு இருபது-20 போட்டிகளில் விளையாட முடியும் என நம்புகிறேன். இருபது-20 உலகக் கோப்பை தொடருக்கான இலங்கை அணித்தலைவராக செயற்பட வேண்டும் என கிரிக்கெட் வாரியம் கூறியுள்ளது. ஆனால், எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்பது தொடர்பில் தெரியாது. எவ் வாறாயினும், இருபது-20 போட்டிகளில் 4 ஓவர்கள் மாத்திரமே வீசவேண்டும். எனது திறமையை பயன்படுத்தி என்னால் விளையாட முடியும்.

இலங்கை அணி திறமையான பந்துவீச்சாளர் ஒருவர் இல்லாமல் தடுமாறுகிறது. குறிப்பாக பந்துவீச்சாளர்களிடம் தொடர்ந்து நேர்த்தியாக பந்துவீசும் தன்மை குறைவு. அதனை ஒன்று அல்லது ஒன்றரை வருடங்களில் சரிசெய்துவிட முடியாது.

நாம் பொறுமையாக இருக்க வேண்டும். இதற்கு மூன்று ஆண்டுகள் எடுக்கலாம். அதற்கு வீரர்களின் நிலைத்தன்மை அவசியம். தேர்வுக்குழு இதில் அவதானம் செலுத்த வேண்டும் என லசித் மலிங்க தெரிவித்துள்ளார். (க)

சச்சினைப் போன்று அறிமுகமான பாகிஸ்தான் வீரர்!

சச்சினை போன்று 16வயதிலே, கிரிக்கெட் போட்டியில் அறிமுகமாகியுள்ளார் பாகிஸ்தான் வீரர் நசீம் ஷா.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

இதில், பாகிஸ்தான் அணியின் அறிமுக வீரராக 16 வயதேயான நசீம் ஷா களமிறங்கியுள்ளார். இவர், 145 கிலோ மீற்றர் வேகத்தில் பந்துவீசும் திறன் கொண்டவராவர்.

டெஸ்ட் போட்டியில் அறிமுகமான அவருக்கு டெஸ்ட் போட்டிக்கான தொப்பியை பயிற்சியாளர் வாக்கார் யூனுஸ் அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, கடந்த வாரம் அவுஸ்திரேலியாவில் நசீம் ஷா பயிற்சி ஆட்டத்தில் ஆடிக் கொண்டிருந்தபோது, அவரது தாயார் உடல்நலக்குறைவு காரணமாக இறந்து போனார். ஆனால், இறுதிச் சடங்கிற்கு செல்லாமல் தாயார் ஆசைப்படி தொடர்ந்து பயிற்சி ஆட்டத்தில் நசீம் விளையாடினார்.

மிக இளம் வயதில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமான வீரர்களில் நசீம் ஷாவும் ஒருவர். ஒருசில வீரர்கள் மட்டுமே 16 வயதில் அறிமுகமாகி உள்ளனர். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 16 வயதில் டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகி, பின்னாளில் உலகமே உற்றுநோக்கும் கிரிக்கெட் ஜாம்பவானாக உருவெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக வெற்றிச் சதவீதம் அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக வெற்றிச் சதவீதத்தை கொண்ட அணிகளின் பட்டியல் வெளியாகியுள்ளது.

கிரிக்கெட் போட்டியை கண்டுபிடித்ததாக அறியப்படும் இங்கிலாந்து அணி அதிகபட்சமாக 1016 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளது. ஆனால் வெற்றிச் சதவீதத்தில் அந்த அணி முதலிடத்தில் இல்லை.

அவுஸ்திரேலிய அணி 825 போட்டிகளில் விளையாடி 388 வெற்றிகளைக் குவித்து 47.03 வெற்றிச் சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி 435 டெஸ்ட் போட்டிகளில் இதுவரை விளையாடி 164 வெற்றிகளை பெற்று 37.70 வெற்றி சதவீதத்துடன் இரண்டாமிடத்தில் உள்ளது.

இப்பட்டியலில் இங்கிலாந்து அணி 1016 போட்டிகளில் விளையாடி 368 வெற்றிகளை பெற்று 36.22 சதவீதத்துடன் மூன்றாமிடத்தை பிடித்துள்ளது. நான்காம் இடத்தில் உள்ள பாகிஸ்தான் அணி 423 போட்டிகளில் விளையாடி 136 வெற்றிகளை பெற்றுள்ளது.

அதன் வெற்றி சதவீதம் 32.15 ஆகும். இப்பட்டியலில் இலங்கை அணி 285 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 91 வெற்றிகளை பெற்று 31.92 சதவீத வெற்றியுடன் ஐந்தாம் இடத்தை பிடித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 544 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 173 வெற்றிகளுடன் 31.80 சதவீத வெற்றி அடிப்படையில் ஆறாம் இடத்தில் உள்ளது.

இப்பட்டியலில் இந்திய அணி 539 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 156 வெற்றிகளுடன் 28.94 சதவீத வெற்றியுடன் ஏழாவது இடத்தை பிடித்துள்ளது. (க)

எதிர்க்கட்சித்...

ஏற்றுக் கொள்ளப்படுவார் எனவும் சபா நாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்றுக் காலை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது.

அடுத்த பாராளுமன்ற அமர்வுகளை கூட்டும் காலம், அடுத்ததாக ஆளும் மற்றும் எதிர் கட்சிகளின் ஆசன ஒதுக்கீடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் அதிகமாக பேசப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப் பினர்களான லக்ஷ்மன் கிரியல்ல, டலஸ் அழகப்பெரும, ரவூப் ஹக்கீம், ரவி கருணா நாயக்க, தினேஷ் குணவர்த்தன, மகிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ச, நிமல் சிறிபால.டி.சில்வா, அமீர் அலி, அஜித்.பி.பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு ஜக்கிய தேசிய கட்சிக்குள் இருந்தே ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேம தாஸ ஆகிய இரு நபர்களின் பெயர்கள் பரிந் துரை செய்யப்பட்ட நிலையில் இருவரின் பெயர்களும் சபாநாயகர் கரு ஜெயசூரிய விற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்று பாராளுமன்றத்தில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டி ருந்தது.

இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர் குறித்த சர்ச்சையும் இதன்போது எழுப்பப் பட்டது.

ஜக்கிய தேசிய கட்சி பிரதான எதிர்க் கட்சியாக மீண்டும் பாராளுமன்றத்தில் அமர வுள்ள நிலையில் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை ஒரு தரப்பினரும் சஜித் பிரேம தாஸவின் பெயரை இன்னொரு தரப்பி னரும் ஜக்கிய தேசிய கட்சியின் சார்பில் முன்வைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ரணில் - சஜித் என்ற இருவருடைய பெயர்கள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

எனினும் இதன்போது பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கருத்துக்களை முன்வைத்த சபாநாயகர் கரு ஜெயசூரிய எதிர்க்கட்சி தலைவர் யார் என் பது குறித்தும் யாரை தெரிவுசெய்ய வேண் டும் என்பது குறித்தும் பாராளுமன்ற அலு வல்கள் பற்றிய குழுவில் பேசி அர்த்த மில்லை.

இந்த விடயமானது குழுவின் விடயப் பரப்புக்கு உட்பட்டதும் அல்ல. ஜக்கிய தேசிய கட்சி எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தில் அமரவுள்ள நிலையில் யார் எதிர்க்கட்சி தலைவர் என்பது ஜக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய உட்கட்சி விவகாரம், இதனை பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை என சபா நாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். (ஞா)

மகிந்த ராஜபக்ஷ..

டார்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பதவியேற்ற அவர், மாலை 3.55 மணிக்கு கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில் இடைக்கால அரசின் 15 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர வையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முன்மொழிவார் என்று அறியமுடிகிறது.

இந்த இடைக்கால அரசு வரும் மார்ச் முதலாம் திகதி பாராளுமன்றம் கலைத்து பொதுத் தேர்தல் இடம்பெறும் வரை நடை முறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஞா)

ஆறு மாகாணங்...

செய்து கொண்டுள்ளனர்.

அதன்படி மேல் மாகாணம் - டாக்டர் சீதா அரபேபொல, மத்திய மாகாணம் - லலித் யு கமகே, ஊவா மாகாணம் - ராஜா கொல் ளூரே, தென் மாகாணம் - டாக்டர் வில்லி கமகே, வடமேல் மாகாணம் - ஏ.ஜே.எம் முஸம்மில், சப்ரகமுவ மாகாணம் - டிகிரி கொப்பேகடுவ ஆகியோரே மேற்படி ஆளு நர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஞா)

ஐ.தே.கவுக்கு...

நவீன் திசநாயக்க ஆகியோர் குழுவில் அங்கம் வகிப்பார்கள்.

இந்த குழுவே, அடுத்து வரும் பாராளு மன்றத் தேர்தல் விவகாரத்தையும் கவனிக் கும். பாராளுமன்றத் தேர்தல் பணிகள் நால் வரிடமும் பகிர்ந்தளிக்கப்படும்.

பொதுத்தேர்தலின் முடிவில், நால்வரின் செயற்பாடும் கவனிக்கப்பட்டு, சிறப்பாக செயற்பட்டவரிடம் தலைமைப் பதவியை வழங்குவதென தீர்மானித்துள்ளார்.

தனது திட்டத்தை கட்சியின் பிரமுகர் களிடம் அவர் தெரியப்படுத்தியுள்ளார். (ஞா)

புலன் விசாரணை..

கடற்படை, இராணுவ அதிகாரிகள் மீதான முக்கிய குற்றச்செயல் குற்றச்சாட் டுக்களை விசாரணை நடத்திவந்த மூத்த பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியில் இருந்து தென் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உதவியாள ராக இடமாற்றப்பட்டுள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் கோரிக் கைக்கு அமைய இந்த இடமாற்றம் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய பாதுகாப்பு செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப் பட்டுள்ளார்.

இந் நிலையில் அவரின் கீழ் வரும் பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய பதவியான பணிப்பாளர் இடமாற்றப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றி வரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பொறுப்பதி காரியாக, உதவி பொலிஸ் அத்தியட்சராக, பொலிஸ் அத்தியட்சராக, பிரதிப் பணிப்பாள ராக கடமையாற்றியிருந்தார்.

2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

அரசியல் தீர்...

காண்பதற்கான தேசிய நல்லிணக்க செயன் முறைகளை இலங்கை அரசாங்கம் முன் னெடுக்கும் என்ற இந்தியாவின் எதிர் பார்ப்பை இலங்கை ஜனாதிபதியிடம் ஜெய் சங்கர் பேச்சுவார்த்தையின்போது தெரியப் படுத்தினார் என்று கூறிய பேச்சாளர் குமார், இனத்துவ அடையாள பாகுபாடு இன்றி சகல இலங்கையர்களுக்குமான ஜனாதிபதியாக தான் இருப்பேன் என்று கோட்டாபய ராஜ பக்ஷ ஜெய்சங்கரிடம் கூறியதாகக் குறிப் பிட்டார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் பேச்சாளர் கூறினார். (ஞா)

கிருமித் தொற்று...

பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த கர்ப்பிணிப்பெண் நுரையீரலில் கிருமி தொற்றியதன் காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

எனினும் மருத்துவர்கள் சத்திரசிகிச்சை மூலம் குறித்த கர்ப்பிணிப் பெண்ணின் குழந்தையைக் காப்பாற்றியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மரண விசா ரணையை யாழ்.போதனா வைத்தியசாலை யின் திடீர் மரண விசாரணை அதிகாரி நம சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

புதிய அமைச்...

யில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழக பெரும குறித்த தகவலினை வெளியிட்டுள் ளார்.

இந்த அமைச்சரவையில் டக்ளஸ் தேவா னந்தா மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங் கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. (ஞா)

குடும்பஸ்தர்...

தில் வேலை நிமித்தம் சென்று வீடு திரும்பி வந்து கொண்டிருந்தபோது வளைவில் திருப்ப முற்பட்டவேளை யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கி ளொன்று மோதிய தில் சம்பவ இடத்தி

அமைச்சுக்களிலிருந்து

ராஜித, ரிஷாத் பதவி விலகினர்

(கொழும்பு)

சுகாதார அமைச்சராக பதவியில் இருந்த போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான எரிபொருள் பற்றுச்சீட்டுக்களை அமைச்சிடம் ஒப்ப டைத்துவிட்டு முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பதவியிலிருந்து விடை பெற்றுச் சென்றார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற வைபவத்தின்போது ராஜித சேனாரத்ன அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா விடம் அந்த எரிபொருளுக்கான பற்றுச்சீட்டுக் களை ஒப்படைத்தார்.

இதேவேளை "அரசியலமைப்பில் இட மிருந்தபோதும் மக்களாணையை மதித்து நாங்களாகவே பதவி விலகுகின்றோம். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்று வதற்கு நாம் இடையூறாக இருக்க கூடாது என்பதற்காகவே இந்த முடிவை மேற் கொண்டோம் என ரிஷாத் பதியுதினும் அமைச்சர் பதவியில் இருந்து விலகிக் சென் றார். (ஞா)

லேயே குறித்த நபர் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு அன்றைய தினமே கிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

மயக்கமடைந்து...

அதில் ஊற்றுப்புலம் கிளிநொச்சிப் பகுதி யைச் சேர்ந்த 55 வயதுடைய 3 பிள்ளை களின் தந்தையான சுப்பிரமணியம் செல் லப்பா என்பவரே கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதியில் இரவுவேளை நடந்து சென்றபோது மயக்கமடைந்து விழுந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

காமினி செனரத்...

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது, ஜனாதிபதியின் பிரதானியாக காமினி செனரத் கடமையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் பணிக்குழாத்தின் பிர தானியாக காமினி செனரத் பணியாற்றிய போது லிற்ரோ சமையல் எரிவாயு நிறுவனத் தின் நிதி மோசடிக் குற்றச்சாட்டு மைத்திரி - ரணில் அரசால் முன்வைக்கப்பட்டது.

எனினும் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் நீதிமன்றால் விடு விக்கப்பட்டார்.

இந்த நிலையில் இடைக்கால அரசின் பிரதமரின் செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ளார். (ஞா)

மஹஜன சம்பத
திகதி 2019/11/21
சீட்டிழுப்பு இலக்கம் 4053
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 7 8 3 4 3
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1570
திகதி 2019/11/21
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 35 42 48 66
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 21-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2307
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 23 28 46 63
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/11/21
சீட்டிழுப்பு இலக்கம் 0626
லக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 10 16 29 68

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1078
சீட்டிழுப்பு திகதி 21.11.2019 வியாழக்கிழமை
P 19 23 39 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,445,072
தொ.பே: 0112 335 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21/11/2019 வெற்றி வாரம் 2684 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 07 30 42 58
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,423,016
2019/11/22 ம் திகதி வெள்ளிக் கிழமை கரு நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது நேரித அழைப்பு: 1919

அத கோடிபதி ஆடா கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 798
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,084,815/-
வெற்றி இலக்கங்கள் 24 28 36 75
ஆங்கில எழுத்து X
தொ.பே: 0114 824 824, 0112 333 778 or 1919

ஜயோதா அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1623
சீட்டிழுப்பு திகதி 21/11/2019
வெற்றி இலக்கங்கள் 10 35 54 66
ஆங்கில எழுத்து W
அடுத்த செவ்வாய் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 41,307,744
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சஜித் தோற்றமைக்கு என்ன காரணம்

இருவாரங்களுக்குள் அறிக்கை கோரும் ரணில்

(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றது ஏன் என்பது குறித்து அறிக்கையளிக்கும்படி முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார். அதற்கமைய தனக்கு இரண்டு வாரங்களுக்குள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பிரேமதாசவின் பிரசாரக் குழுவிற்கான நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பின்னணியில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஞா)

மண்கும்பானில் விபத்து; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஊர்காவற்றுறை பிரதான வீதியில் மண்கும்பான் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சென்றவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா)

பாணின் விலை 5 ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து அதிகரிக்கப்பட்ட பாணின் விலை மீண்டும் பழைய விலைக்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பிறிமா மற்றும் செரன்டிப் நிறுவனங்கள் பழைய விலைக்கு கோதுமை மாவினை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளமையை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலை வர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நேற்று முன்தினம் 5 ரூபாயினால் அதிகரிக்கப்பட்ட பாணின் விலை நேற்று குறைக்கப்பட்டுள்ளது. (ஞா)

கிழக்கு மாகாண ஆளுநராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண?

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்கு ஆளுநர் பதவியை பெற, முன்னாள் பாதுகாப்புத்துறை அதிகாரி சரத் வீரசேகர கடுமையான பிரயத்தனத்தில் ஈடுபட்டபோதும், அவரை ஆளுநராக நியமிப்பதில்லையென கோத்தபாய தீர்மானித்திருந்தார்.

படைத்துறை சார்ந்தவர்களை ஆளுநர் பதவிக்கு நியமிப்பதால் தேவையற்ற விமர்சனங்கள் ஏற்படுமென்பதால், அவரது பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. (ஞா)

4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்மகிழ 18 04 1948

கண்நெகிழ 06 12 2015

அமரர் செல்லர் இராசமணி

திதி : கார்த்திகை மாத அபரபக்க ஏகாதசி

ஆறாத்துயர் சுமந்து முடிந்தன ஆண்டுகள் நான்கு
உழைப்பை உரமாக்கி உதிரத்தை வியர்வையாக்கி
தரணியில் நாம் வாழ - அன்று
தாம் எமக்களித்த அனுபவ வலிகள், வார்த்தைகள்
செயற்பாடுகளே - இன்று
நாம் தலை நிமிர்ந்து வாழும் ஒவ்வொரு நொடிப்பொழுதும்
தம் நினைவுகளை அலங்கரித்து வலுப்படுத்தி நிற்கிறது

மீசாலை கிழக்கு,
மீசாலை.
(1142)
- குடும்பத்தினர்

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

SLAS
சனி, ஞாயிறு
9.30 – 3.30
மாதிரி பரீட்சைகள் ஞாயிறு (24/11) முதல் 8.00 – 9.30 வரை நடைபெறும். பரீட்சையில் வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம்.

SLAcS
சனி, ஞாயிறு
9.00 – 4.00
(C-8293)

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

தொடர்பு :
076 688 3394

The Inner Circle
VACANCY

Call Today Start Tomorrow

நீங்கள் 18 - 26 வயதிற்குட்பட்டவரா? O/L அல்லது A/L கற்றிருப்பின் எமது [The Inner Cricle (Pvt) Ltd] கம்பனியுடன் இணைந்து பணியாற்ற இதோ ஓர் அரிய வாய்ப்பு.

பதவி வெற்றிடங்கள்
- Clerks
- Receptionist
- Store Keepers
- Supervisors
- Assistant Managers
- Managers

முன் அனுபவம் அவசியமற்றது. இலவசபயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தின் போது அடிப்படைச் சம்பளமாக ரூபாய் 24,550/=, EPF + ETF பெறுவதுடன் மருத்துவ வசதி மற்றும் தங்குமிடவசதியும் செய்து தரப்படும். பின் நிரந்தரபதவிக்கேற்ப குறைந்தது ரூபாய் 40,000/=ல் இருந்து வருமானம் மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றும் வாய்ப்புக்களும் பெறமுடியும்.

இல.100/3,
முட்டாஸ் கடை சந்தி,
மூன்றாம் மாடி, யாழ்ப்பாணம்.
(1143)
தொடர்புகளுக்கு :
076 770 7759,
077 999 4807

கடை வாடகைக்கு

யாழ்.கஸ்தூரியார் வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு :
077 993 8348
(C-8285)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-8115)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240
V2 TRAVELS

FALC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France)
(C-8279)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 23.11.2019 சனி 8 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி
0779 789 456
ஆரம்பம் 25.11.2019 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8109)
(C-8255)

O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு
வரலாறு
ஆசிரியர்: R.S. சந்திரன்

நவம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை (காலை 8.30-2.00)
நவம்பர் 25 திங்கட்கிழமை (பி.ப 8.30-2.00)
நவம்பர் 26 செவ்வாய்கிழமை (பி.ப 3.00-5.00)

குறிப்பு காலம்
1. ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
2. எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
3. இலங்கைப்படம், உலகப்படம் இலகு முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்

கட்டணம் 600/=

றோயல் அக்கடமி
அரசடி றோட், யாழ்நகர்
0776649134
(1140)

றொமானியா வேலைவாய்ப்பு

JCB/Excavator Opertaor Electrician, தச்சுவேலையாள் மேசன்/உதவியாளர், வெல்டர் களஞ்சியப் பணியாளர் தையல்மெஷின் ஒப்பறேட்டர் மெக்கானிக் மற்றும் வீதிக் கட்டுமானப்பணி அனுபவமுள்ளவர்கள்
(C-8291)

உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்!
சம்பளம் 600 - 1,100 US$ 99,500 - 199,100

விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...
077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221

எமரல்ட் ஐல்
License No. 2268
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இவரா டிவையகம், The Lovers/Tean Girls அருகே
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.